லக்ஷ்மி மலர் 1 இதழ் 1

ஆகஸ்டு 1923

சென்னை

1923

JL
211,N23 LA
N23.1.1
210329

1803 No. 1

# லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

## குஞ்சம் கட்டின
# பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பலவித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு x 40 1 க்கு ரூ. **12, 14, 16, 18.**

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. **16** முதல் **20** வரை.

---

# இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளை பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர்:— அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு x $2\frac{1}{4}$ அகலம் புடவை 1-க்கு ரூ. **15, 18, 20.**

எங்களிடம் சேலம், மதுரை, கோரனாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களிலிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒருமுறை எங்களிடம் வந்து பாருங்கள்.

---

## வலைப் பனியன்

பொத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. **1, 1-4, 1-8.**

## கே. எஸ். முத்தையா & கம்பெனி

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

சென்னை.

ஓம :

# லக்ஷ்மி

## ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. { ருத்ரோத்காரி௵ ஆவணி௴ ஆகஸ்டு 1923 } இதழ் க.

## அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மி துதி ... ... | 3 |
| 2. | தமிழ்த் தெய்வ வணக்கம் ... ... | 4 |
| 3. | நமது பத்திரிகை ... ... | 5 |
| 4. | லக்ஷ்மி பிரஸன்னம் ... ... | 7 |
| 5. | மரம் ஏறும் மீன் ... ... | 12 |
| 6. | கனவுப் பொடி ... ... | 17 |
| 7. | ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் | 26 |
| 8. | விநோதம் ... ... ... | 31 |
| 9. | அதிர்ஷ்ட வசம் ... ... | 33 |
| 10. | பழமொழிக் குறிப்புகள் ... ... | 34 |
| 11. | லக்ஷ்மி தேவி ... ... | 37 |
| 12. | திருவளர் தாமரை ... ... | 39 |
| 13. | குழந்தைப் பாட்டு ... ... | 44 |
| 14. | ஆறு ... ... | 45 |
| 15. | விகடத் துணுக்குகள் ... ... | 46 |
| 16. | பெண்கள் பகுதி ... ... | 48 |
| 17. | பதியிலக்கணம் ... ... | 49 |

# லக்ஷ்மி.

## சந்தா விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள் நாட்டுக்கு வருடம் 1க்கு | ... | ... | ரூ. 2. |
| வெளி நாட்டுக்கு ,, 1க்கு | ... | ... | ரூ. 2-8 |
| உயர்ந்த பதிப்பு (Art Paper) | ... | ... | ரூ. 10. |

**விளம்பரம்**

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 15. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக் கொள்ளவும்.

மானேஜர்.

---


## லக்ஷ்மி புத்தகசாலை

நமது லக்ஷ்மி புத்தக சாலையில் சகல தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும்.

மானேஜர் :

லக்ஷ்மி புத்தகசாலை,
தபால் பெட்டி நெ. 99,
சென்னை.

---

## நார்மடிப் புடவைகள்

| | | | |
|---|---|---|---|
| 18 மு. x $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு | ... | ரூ. 20, 25. |
| 18 மு. x $2\frac{3}{4}$ ,, ,, 1-க்கு | ... | ரூ. 25, 30. |
| 20 மு. x $2\frac{3}{4}$ ,, ,, 1-க்கு | ... | ரூ. 25, 28, 35. |

எங்களிடம் சேலம், மதுரை, கொரனாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களிலிருந்து புது மாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

**கே. எஸ். முத்தையா கம்பெனி,**
சில்க் ஹவுஸ், 188, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு,
சென்னை.

ஓம் :



# லக்ஷ்மி துதி

திருமகளே! திருப் பாற்கட லூடன்று தேவர் தொழ
வருமகளே! உலகெல்லாமும் என்றென்றும் வாழ வைக்கும்
ஒரு மகளே! திருமால் உரத்தேயுற் றாரம் பெரிது
தருமகளே! தமியேன் தலைமீது நின் தாளை வையே!

---

மடற் கமல நறும் பொகுட்டில் அரசிருக்கும்
செந்துவர் வாய் மயிலே! மற்றுன்
கடைக்க ணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாம் காவல் பூண்டான்?
படைத்தனன் நான்முகக் கிழவன்? பசுங் குழவி
மதி புனைந்த பரமன் தானும்
துடைத்தனன்? நின் பெருஞ் சீர்த்தி எம்மனோ
ரால் எடுத்துச் சொல்லற் பாற்றோ? (1)

மல்லல் நெடும் புவி யனைத்தும் பொதுநீக்கித்
தனிப்புரக்கும் மன்னர் தாமும்,
கல்வியினிற், பேரறிவிற், கட்டழகில்
நிகரில்லாக் காட்சி யோரும்,
வெல் படையிற் பகை துறந்து, வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழை!
நின் அருள்நோக்கம் அடைந்துளாரே. (2)

### லக்ஷ்மி

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந் தொளிரும்
எழில்மேனித் திருவே! வேலை
அங்கண்உல கிருள்துறக்கும் அலர் கதிராய்,
வெண் மதியாய், அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே!
நெடுங்கானிற், பொருப்பில், மண்வாரில்
எங்குளை நீ அவணன்றோ மல்லல் வளம்
சிறந் தோங்கி யிருப்ப தம்மா! (3)

---

## தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழி லொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநற் றிருநாடும்.
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமி ழணங்கே!

[மோர்
பல்லுயிரும் பல வுலகும் படைத்தளித்துத் துடைக்கினு
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

(மனோன்மணீயம்.)

# நமது பத்திரிகை

தெய்வத் திருவருளைத் துணையாகக் கொண்டு தோன்றும் "லக்ஷ்மி" என்ற பத்திரிகையை நாம் தமிழகத்தாருக்குச் சமர்ப்பிக்கின்றோம். தமிழில் பத்திரிகை ஒன்று நடத்தவேண்டுமென்ற விருப்பம் நீண்ட நாளாக நமக்கு இருந்து வந்தது. அவ்விருப்பம் திருவருளால் இன்று நிறைவேறுகின்றது.

நமது பத்திரிகையின் நோக்கத்தை விரித்துரைக்க வேண்டியது அவசியம் இல்லை. தமிழ் மக்களின் மேம்பாட்டுக்குரிய பல விஷயங்களும் நம் பத்திரிகையில் இடம் பெறும். "வேத ஆராய்ச்சி முதல் வித்து நடுதல் ஈறாக" உள்ள சகல விஷயங்களையும் பற்றித் தமிழறிஞர்கள் எழுதும் அரிய வியாசங்களைத் தனக்கு அணிகலனாகக் கொண்டு நமது 'லக்ஷ்மி'

விளங்குவாள். நாட்டிலே கல்விப் பெருக்கும் செல்வப்
பெருக்கும் ஏற்படவேண்டு மென்பது நமது நோக்கம்.
அதற்குத் துணையான வியாசங்கள் லக்ஷ்மியில் இடம்
பெறும். நாட்டிலே, அன்பு வளர்ந்து, அறிவு பெருகி,
இன்பம் ஓங்குவதற் குரிய வியாசங்களை என்றென்றும்
நமது லக்ஷ்மி தாங்கி வருவாள். ஆண்களுக்கும் பெண்
களுக்கும் இன்பம் அளிக்கக் கூடிய அழகிய பாடல்
கள், நமது லக்ஷ்மிக்குச் சிறந்த தமிழ் அணிகலன்களாக
விளங்கும். தமிழ் மொழியின் பெருமை, தமிழ் நாகரிகத்
தின் மகிமை, தமிழ் மக்களின் மாண்பு, பாரத தேசத்தின்
பொது நாகரிகம் இவற்றை விளக்கும் வியாசங்கள்
"லக்ஷ்மி"யில் அடிக்கடி வெளி வரும். சித்திரப்
படங்களும், உலக விநோதங்களும், விகடக் குறிப்புகளும்,
பொழுது போக்குக்குரிய இனிய கதைகளும், நவீன
சாஸ்திர விஷயங்களும் இடம் பெறும். லக்ஷ்மி யென்ற
நமது பத்திரிகை நமது தாய்மார்களுக் காகவும், சகோதரி
களுக்காகவும் விசேஷமாகப் பாடுபடும் என்பதைச் சொல்
வது மிகையாம்.

சுருங்கக் கூறின், நாட்டின் நன்மைக்குரிய சகல
துறைகளிலும் நாம் பாடுபடுவோம். தமிழ் நாட்டில் சிறந்த
மாதப் பத்திரிகையாக "லக்ஷ்மி"யைச் செய்யவேண்டுமென்
பது நமது விருப்பம். நமது பத்திரிகை—லக்ஷ்மிக்கு,—
ஜெகத் லக்ஷ்மியின் திருவருள் பெருகுமாறு அவள் பாத
மலர்களை வணங்குகின்றோம்.

தமிழ்நாட்டு நல்லோர்கள், நண்பர்களுடைய ஆசியை
யும், அன்பையும் எதிர்நோக்கி நமது லக்ஷ்மியை வெளியிடு
கின்றோம்! சுபம்!

# லக்ஷ்மி பிரஸன்னம்

"மலரினில், நீல வானில், மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை யீசன் இயற்றினன்" (பாரதி)

ஆஹா! மந்தமாருதம் விசுகின்றது. உன்னதமான உத்தியான வனம். அங்கு புஷ்பித்துள்ள மலர்களின் வனப்பை வர்ணனை புரிய யாரால் முடியும்? அதன் இன்பமான ஸுவாஸனை நரர்களின் நாஸிகத்தைத் துளைக்கின்றது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் அவ்வழகிய மலர்களைக்கொண்டு பகவானை அர்ச்சிக்கவேண்டுமென்கிற ஆவல் அடிக்கடி உண்டாகும். காலை நேரத்திலும் மாலைப் பொழுதிலும் மலர்ந்து நறுமணம் கமழும் மலர்களால் அரண்யங்களும் உத்தியான வனங்களும் எத்துணை காந்தி மயமாய் ஜ்வலிக்கின்றன? 'மலரினில்' அழகினை, லக்ஷ்மீகரத்தை நாம் காணப் பெறுகின்றோம். அழகிய புஷ்பங்களை விரும்பாதார் யாவர்? எத்துணை யலங்காரம் செய்து கொள்ளினும், அவற்றினிடையே அந்தப் பூங்கொத்து ஒன்று விளங்கும்போதுதான் அந்த அலங்காரம் பரிபூரண முள்ளதாகிறது. இதுகாறும் செய்யப்பெற்ற அலங்காரங்கள் யாவற்றினும் அந்த மலரானது தலைமைகொண்டதாகி உன்னதத்தில் உயர்ந்

துள்ளது. லக்ஷ்மி பிரஸன்னம் புஷ்ப வர்க்கங்களில் நன்கு தோற்றும். மலர்களைக்கொண்டு பகவானை அர்ச்சிக்கும் போது நமது ஹிருதயம் எத்துணைப் பரவசம் கொள் கின்றது. பரந்தாமன் புஷ்பங்களின் அர்ச்சிப்பைப் புன் முறுவலாய் ஆநந்தத்துடனும் ஏற்றுக் கொள்கின்றார். "புஷ்ப வருஷம் வருஷிக்க" என்பது எத்தனை அழகிய சொல்?

> "வாரீர் நாடோறும்
> வாடா மலர் கொண்டு
> பாடீர் அவர் நாமம்
> வீடே பெறலாமே."

***

அழகிய புஷ்பங்களை மனிதர்கள் அநுபவிப்பது ஒருபுறமாக, தேனீக்களும் அவற்றினின்றும் தேனைச் சேகரித்துக்கொண்டு செல்கின்றன. இந்தப் பாக்கியம் தேனீக்களுக்கு மட்டுமே கிடைத்திருக்கின்றது. அந்தப் புஷ்பங்களுக்கு அருகிலேயே இருந்த வண்டுகளுக்கு அது கிடைத்தில. லக்ஷ்மீகரமாய் விளங்கும் ஒன்றினை, வெகு சுறுசுறுப்புடன் தூர இடத்தினின்றும் வருபவனே அடைந்து அநுபவிக்கும் ஆற்றல் மிகுகின்றான். அவ் வூரிலேயே இருக்கும் ஒருவனுக்கு அங்குள்ள அருமை பெருமைகள் தோன்றுவதில்லை. அவற்றால் ஒரு புது உணர்ச்சியும் அவன் எய்தப் பெறுவதில்லை. அவ்விடத் திற்கு முற்றும் அந்நியனான வேறொருவன் அங்கு வருவா னாகில், அவனுக்குக் காண்பன ஒவ்வொன்றும் ஒவ்வொரு அதிசயத்தையும் புது உணர்ச்சியையும் விளைக்கின்றது. அவ்விடத்தில் ஒரு புதுத் தொழிலைத் தொடங்கவும், வியா பகமான வியாபாரமொன்றை ஆரம்பித்துவிடவும் சக்தி வந்தனாய் விடுகின்றான். அவனது கையின் கீழ மர்ந்து பணி செய்யவே அவ்வூரார் வருகின்றனர். அவனுக்கு உண்டாகிய புத்தி தீக்ஷண்யம் அவ்வூராருக்கு உதிப்ப தில்லை. தனது நகரத்தில் ஜீவிய மற்ற ஒருவன் பிழைப்ப தற்காக வேற்றூர் தேடிச் செல்கின்றான். அங்கு அவ

னுக்கு எவ்விதமோ ஒரு ஸம்பாத்தியம் ஏற்பட்டு அவன் ஒரு தொழில் வல்லோனாய் ஏராளமான திரவியத்திற்கு அதிபதியாகி விடுகின்றான். லக்ஷ்மி பிரஸன்னம் எக்காலத் தும் சுறுசுறுப்புள்ளவனுக்குக் கிடைக்கின்றதேயன்றி, சோம்பி நிற்பவனுக்கு வரப்பெறுவதில்லை. “அதோ பார், அவன் முகத்தில் அசடு வழிகின்றது” என்று ஒருவனைக் குறித்துக் கூறுவதும் இப்பொருள் கொண்டுதான். சுறு சுறுப்புள்ளவனுக்கு லக்ஷ்மி பிரஸன்னம் சொந்தம். நறு மலர் சூடுவோர் சுறுசுறுப்பின் கண்மணிகளே யாவர்.

***

“நீலவானிடை நிலவி யிருந்தது அவன் நினைவு” என்றார் ஓர் கதாசிரியர். நீலவானத்தின் அழகினை உள்ள படியே அநுபவித்தோர்தான் அதனை உணர வல்லார். அநு பவிக்கும் நுண்ணிய உணர்வு கைவரப்பெறுவது அனைவர்க் குமே சித்திப்பதன்று. அநுபவித்தற்கும் ஒரு பிராப்தம்—பாக்கியம்—அதிர்ஷ்டம் அங்கு இருக்கவேண்டும். அள வற்ற ஐச்வரியத்தைத் தேடியதேயன்றி, வாணாள் இறுதி வரையும் அவற்றினை அநுபவித்தற்குத் தருணம் நேராமல், —நேரு மென்றிருந்த தருணத்தில் உலகத்தைத் துறந் தோர் ஆயிரவர். ‘ஒருவன் தேட, வேறொருவன் அநுப விக்க’—என்பதே நித்தமும் காணும் காட்சி. மக்களும், மனைவியும், மற்றுமுள்ள வைபவங்களும் தன்னைச் சூழ்ந்து நிற்க, அவற்றை அனுபவித்தற்கின்றி அவன் முடிவெய்தி விடுகின்றான். ஏராளமான செல்வமிருந்தும், ஒரு ஏழைக்கு வெகு சுலபத்தில் கூடிவிடுகிற விவாக பாக்கியம் ஒரு தனவந்தனுக்கு லபித்திடாமல், அவன் கண்மூடிய பின்னரே அவன் கழுத்திற்கு மணமாலை வீழ்கின்றது. எனவே அநு பவித்தல் என்பது ஒரு தனி விஷயம்.

காலைப் போழ்தினில் நீலவானத்தை நோக்குகையில் நமது மனதிற்கு எத்துணை மகிழ்வுண்டாகின்றது! பால சூரியன் தேஜோமயனாய்ப் பிரகாசிக்க, அதுகாலை அழகிய வானத்தை நோக்க எத்துணை ஆநந்தம்! மாலை நேரத்தில் ஸமுத்திர தீரத்தி லிருந்த வாறாக ஐயன் படைப்பைக் காணில் நீலவானத்தின் ரமணீயம் நன்கு புலனாகும். இரவில்

ஆகாசத்தினிடையே பூர்ணிமா சந்திரன் உதயமாக, சூல் கொண்ட மேகங்கள் வெகு வேகத்துடனும் மோகத்தோடு சந்திரன்மீது பாய, அவற்றைத் தழுவி இன்பங்கூர்ந்து தன் இனிய நிலவுடன் மீண்டும் வெளித்தோன்ற, மற்றொரு மேக நங்கை மறுபடியும் தாவ—அதற்கும் முத்தன்ன முத்தமீந்து விடைதர, இங்ஙனம் மதன ஒய்யார மாரனைத் திகழும் மந்தகாஸ பூர்ண சந்திரவதனந் தானென்னே! இரவு நேரத்தில் விசும்பினை அலங்கரிக்கும் நக்ஷத்திரங்களின் எழிலினைக் காணக் காண எத்துணைப் பரவச முதிக்கின்றது? லக்ஷ்மிதேவி பிரஸன்ன வதனமாய் நீல வானத்திடை சோபித்தலை நன்கு காணலாம்.

***

இனி, "மாதரார் முகத்தில்" என்றார் கவி. வனிதா ரத்தினங்களின் முகவிலாஸம் ஆடவர்தம் வாழ்க்கையை அத்தியந்த சுவை யுள்ளதாக்குகின்றது. 'இல்லாள் அகத்திருக்க—இல்லாத தொன்றில்லை' யென்று பூரண மனது கொள்ள வைக்கின்றது. உலக வாழ்வில் ஒருவனுக்கு ஓர் பெண்கனி அமர்கையில், அவள் வீட்டினுள் கால்வைத்ததும், அன்றுமுதல் அந்த இல்லம் லக்ஷ்மி பிரஸன்னமாய் சோபிக்கின்றது. எங்கள் கிரஹத்திற்கு லக்ஷ்மி வந்தாள்; எல்லா நலங்களும் எங்கெங்கும் பெருகின என்று துதித்திடச் செய்கின்றது. மாதர்களின் முகத்தில் இயற்கையா யுள்ள லக்ஷ்மி விலாஸமானது, அலுத்து வீட்டிற்கு வரும் ஆடவனைத் தனது கஷ்டங்களையெல்லாம் மறக்கச்செய்து தான் தேவ ருலகில் விற்றிருப்பது போல் கருதவைத்து இன்ப மய மாக்குகின்றது. "அவளைப் பார்த்தாலே பசி தீரும்; அந்த லக்ஷ்மியால்தான் குடும்பம் இவ்வளவு முன்னுக்கு வந்தது என்று" கூறும் வழக்கச் சொற்களை எங்கணும் கேட்கலாம். லக்ஷ்மி தேவி தனது ஸர்வ ஸக்திகளையும் சௌந்தர ராசிகளையும் தன் இனத்தோராகிய ரமணீமணிகட்கே அருள் புரிந்துள்ளாள். இப்பிரபஞ்சம் மாதாவாய், ஸகோதரியாய் மற்றும் யாவுமாய் நம்பி சரண் புகுந்திருப்பது மாதரார்தம் மிடமேயாம். அம்மங்கையர்க் கரசிகளிடமே லக்ஷ்மிதேவி பிரஸன்ன ரூபமாய் ஜ்வலிக்

கின்றாள். பெண்மணிகளின் மூலமாகத்தான் லக்ஷ்மி பிரஸன்னம் உலகில் ஆடவர்க்கு எட்டுகின்றது.

***

சோம்பி நிற்பவனுக்கு ஏதுமில்லை. சுறுசுறுப்புள்ளவனுக்கே லக்ஷ்மி பிரஸன்னம். நல்ல வேலை வரவில்லையென்று உட்கார்ந்திருப்பவனுக்கு ஒன்றுங் கிட்டாது. எல்லா வேலைகளிலும் உழைத்துக்கொண்டு நிற்பவனுக்கே லக்ஷ்மி பிரஸன்னம். தனது நுணுகிய ஆராய்ச்சியில் எத்துணை அவஸ்தைகள் நேரினும் இறுதியில் அவனுக்கு ஜெய லக்ஷ்மி சொந்தம். முதுகில் காயமின்றி, மார்பிற் காயத்துடன் இறக்கும் வீரனது நாமம் என்றும் லக்ஷ்மி விலாஸம் கொண்டு திகழும். எக்காலத்தும் தளரா நெஞ்சுடன் விடாமுயற்சியோடும் தொடர்ந்து தனது காரியங்களைச் செய்து வருபவன் என்றைக்கேனும் லக்ஷ்மி ஸம்பன்னனாகத் திகழ்வது திண்ணம். புலவர் வறுமை பூமியினும் பரிதாயினும், அவர்களின் கவிகளிலே லக்ஷ்மி தாண்டவமாடுகின்றாள். பெண்களைக் கண்ணியமாய் நடத்தும் குடும்பத்தில் — தேசத்தில் — லக்ஷ்மி என்றும் விளங்குவாள். ஸமாதான குடும்பத்தில் லக்ஷ்மி பிரஸன்னம் எக்காலத்துமிருக்கும். பகவத் பக்தியுள்ளவனது வதனத்தில் லக்ஷ்மி விலாஸம் நன்கு புலனாகும். அஞ்சாத ஆண்மையும், சலியா உள்ளமும், தன் கடமையைக் கடமைக்காகவே செய்யும் தீரமு மிக்கோர் என்றும் லக்ஷ்மி புத்திரர்களாய் வாழ்வர். துன்பத்தின் முடிவில்,கஷ்டத்தின் கடைசியில்,உழைப்பின் இறுதியில், தர்ம யுத்தத்தில், "இருவர்தம் சொல்லையும் எழுதரங் கேட்டு" நியாயம் வழங்குமிடத்தில், நெற்றியில் துலங்கும் திலகத்தில், வெற்றி வீரனின் வாள்முனையில், நூல் வல்லோர்தம் எழுதுகோல் நுனியில், பெண்மணிகளின் கற்பில், புன்னகையில், பகவத் ஸந்நிதியில், லக்ஷ்மி பிரஸன்னம் எக்காலத்தும் உண்டு. லக்ஷ்மியின் அருள் எவருக்கும் கிடைப்பதாக. பிரஸன்ன லக்ஷ்மி வாழ்க.

---

# மரம் ஏறும் மீன்

(பண்டிதர் S. முத்துசாமிப் பிள்ளை.)

நான் எழுத எடுத்துக்கொண்ட விஷயத்தின் பெயரைப் பார்த்தவுடனேயே தமிழ் நாட்டார் குலுங்கக் குலுங்க நகைக்கத் தொடங்குவர். "மீனாவதேது? மர மேறுவதேது? பண்டிதருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது" எனப் பழிமொழி கூறிக் கேலியும் பண்ணுவர்.

"ஐயன்மீர்! நான் கூறுவது உண்மையே! இந்த மரமேறும் மீனைப் பார்க்க நாம் வெளிநாடு செல்லவேண்டாம். கப்பற்கூலியோ, ரெயில் கூலியோ, ஒரு காசேனும் செலவில்லை. இம் மீன்கள் நமது இந்து தேசத்திலேயே இருக்கின்றன" எனக்கூற முன்வருவேனாயின், என் பயித்தியத்துக்கு என் கூற்றே போதுமான அத்தாட்சியென்றும் அன்னோர் நெஞ்சுதட்டிக் கூறாநிற்பர்.

"கன்னியாகுமரி முதல் காசிவரைப் பிரயாணம் செய்து பழகிய நம்மவர் காணாத அதிசயத்தை, பண்டிதர் எவ்வாறு, எப்பொழுது, எவ்விடத்துக் கண்டனர்? ஓகோ கட்டுக் கதை! அண்டப் புழுகு! என அவர்கள் நிந்தை செய்யத் தவறார்கள்.

ஆம்! நம்மவர் இந்துதேசம் முழுதும் தீர்த்தயாத்திரை போவதும் சுற்றுப் பிரயாணம் செய்வதும் மெய்யே. இருப்புப்பாதை ஏற்படுமுன், பக்திமிக்க நமது நம் முன்னோர் கன்னியாகுமரி முதல் காசி பரியந்தம் கால்நடையாகவே சென்றனர்.

அங்ஙனம் சென்றவர் தொகை பல்லாயிரத்துக்கு மேல் என்றும் கூறலாம். இன்றும் செல்கின்றனர்; நாளையும் செல்வர்.

ஆனால், அவ்வாறு பிரயாணம் செய்தவர்களில் யாரேனும், தமது பிரயாண காலத்தில் தாம் கண்ணுற்ற இடங்களையும், அவ்வவ்விடங்களில் தாம் கண்ட காட்சிகளையும் விளக்கி ஒரு சிறு துண்டுப் புத்தகமேனும் எழுதியுளரோ? அல்லது, இப்பொழுது ஆயிரக்கணக்காகப் பரவிவரும் பத்திரிகைகளிலேனும் நிருபங்கள் வரைந்துளரோ? இத்தகைய விருத்தாந்தங்கள் ஆங்கில பாஷையில் ஏராளமாக உள்ளன.

12 B

## ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலயம்.



ஸ்ரீகாசியில் ஸ்ரீவிஸ்வேஸ்வரர் சந்நிதி மூலஸ்தானம் வெள்ளிக் கொட்டியின் நடுவில் ஜோதி லிங்கமூர்த்தி புஷ்ப அலங்காரத்தோடு வீற்றிருக்கும் சேவை.

ஸ்ரீகாசி முதலிய வடநாட்டிலுள்ள பல புண்ணிய க்ஷேத்திரங்களின் சகல விபரங்களும் அழகிய சித்திரப்படங்களுடன் காசி அல்லது நமது புண்ணிய பூமி யென்ற நாமத்துடன் செந்தமிழில் ஓர் அருமையான புத்தகத்தைக் காசி, சில்க் ஹவுஸ், **K. S.** முத்தையா கம்பெனியார் வெளியிட்டிருக்கிறார்கள். விலை அணு **12**.

# மரம் ஏறும் மீன்

நமது அமிழ்தினு மினிய தமிழிலோ நானறிந்த மட்டிலும், நமது முத்தையா கம்பெனியார் வெளியிட்டுள்ள 'காசி' என்னும் அழகிய சிறு நூலைத் தவிர வேறு நூல்கள் இல்லவே இல்லை.

ஏன்? இக் குறைபாட்டுக்குக் காரணம் என்ன? தமிழர்கள் கல்வி அறிவு இல்லாதவர்களா? எழுதப் பழக்கம் அற்றவர்களா?

அம்மம்ம! ஒருகாலு மில்லை. அந்தாதியோ, நான்மணிமாலையோ, பிள்ளைத் தமிழோ, புராணமோ ஆனால் வண்டிக் கணக்காய்ப் பாடுவர். யமகக்கவி வேண்டுமானாலும் இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும் கூறுவர். தாம் கண்ட காட்சிகளை உள்ளபடி வர்ணிப்பதுதான் அவர்களுக்கு முடியாத காரியம். ஏனெனில் நமது சுற்றுப் பொருள்களை வேண்டியவாறு ஊன்றிநோக்கி இயற்கை விநோதங்களைக் கண்டறிய வெறும் தமிழர்களின் (ஆங்கிலப் பயிற்சியில்லாத தமிழர்களின்) கண்ணுக்குச் சக்தியே இல்லை. ஓகோ! தமிழர்களை மட்டும் குறை கூறுவானேன்? இக்குறைபாடு இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவே.

நாயின் அறிவை அல்லது நன்றியறிதலை விளக்குவதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறென்றால் ஆங்கிலப் புத்தகங்களில் தாம் படித்த கதைகளையே நமது பள்ளிச்சிறுவர்கள் எடுத்துக் காட்டுவர்.

இதுபோலவே விடாமுயற்சிக்கும் ராபர்ட்டு புருசையும், உண்மையுரைத்தற்கு ஜ்யார்ஜ் வாஷிங்டனையும், செய்கடன் போற்றற்குக் காசபியான்காவையும் தவிர, நம்மவர் இந்தியர்களில் ஒருவரையேனும் அறியவே அறியார்.

சுற்றுப்பொருள்களை ஊன்றிநோக்கும் சக்தி நமக்கு இல்லாது போயினமையே நமது தற்காலத்திய பரிதாபகரமான நிலைமைக்குத் தலைக்காரணம் என்னலாம். இவ்வளவும் கூறியதனாலே நான் உற்றுநோக்கும் திறம் மிக்குடையேன் என்றேனும், பிரத்தியட்சக் காட்சியை அடிஸ்தானப்படுத்தியே இவ்விஷயம் எழுதுகிறேன் என்றேனும் ஒருவரும் எண்ணம் கொள்ளற்க. 'My Magazine' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் நான் படித்த ஒரு வியாசத்தைத் தழுவியே இது எழுதப்படுகின்றது.

மேலே கூறிய மரமேறும் மீன் அல்லது மரந்தொத்தியை (இது நான் கொடுத்த புதுப்பெயர்) இந்தியாவின் நானா பாகங்களிலும்,

இலங்கைத் தீவிலும், பர்மாவிலும் ஏராளமாய்க் காணலாம். அது ஆறங்குல நீளமுடையது. இருண்ட அல்லது கடும் பச்சைநிறம் பொருந்தியது.

இந்து தேசம் மிகவும் வெப்பம் பொருந்திய நாடாதலின், வேனிற் காலங்களில் ஆறுகளும் ஏரிகளும் உலர்ந்து போகின்றன. அக்கோடை காலங்களில் இம்மீனினங்கள் மாண்டொழியா வண்ணம், தரைமேல் பிரயாணம் செய்யும் சக்தியை இவைகளுக் களித்த பரம் பொருளின் பெருங்கருணையை யார் தான் போற்ருர்கள்? வாழ்த்தார்கள்?

கோடைகாலத்திலே, இம்மீன்க ளிருக்கும் இடத்தில் தண்ணீர் வருமா? வராது. ஆகையால், "மலை மகமதுவை நாடிவரத் தவறின், மகமது மலையை நாடிச்செல்வர்" என்னும் ஆங்கலப் பழமொழிக் கிணங்க, தண்ணீர் இருக்கும் இடந்தேடி மீன்களே செல்லுகின்றன.

விலாங்கு மீன்களும் இம்மாதிரியே பூமியினூடே வெகுநாள் பிரயாணஞ்செய்து கடலையடைந்து முட்டை யிடுகின்றன. இயல்பாகவே நெளிந்து செல்லும் இயல்புடைய விலாங்கு, புல்லிலும் மணலிலும் பிரயாணம்செய்வது வியப்பன்று. ஆனல் சிறிய உருவமும், சாதாரண மீன்களைப் போலவே சிறகும் வாலுமுடைய மரந்தொத்திகள் தண்ணீரிலிருந்து வருந்திக் கரையேறித் தரைவழியாகப் பிரயாணஞ்செய்வது யாருக்குத்தான் வியப்பைக் கொடுக்காது?

ஆறுகளிலும் ஏரிகளிலும் தண்ணீர் இருக்கும்வரை, நமது மரந்தொத்திகள் அவ்விடங்களை விட்டு நீங்குவதில்லை. நீர்வற்றத் தொடங்கினவுடனே தம் பிராணனைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அவை பிரயாணத்துக்கு ஆயத்தமாகின்றன. எல்லாப் பிராணிகளையும்விட மரந்தொத்தி மிகப் பிடிவாதமுள்ளது. அது இலேசாகத் தன் பிராணனை விடாது. தண்ணீர் அறவே வற்றிப்போனாலும் ஐந்தாறு நாள் வரை உயிரைத் தாங்கிக்கொள்ளும் அபூர்வசக்தி அதற்கு இயல்பாகவே அமைந்துள்ளது.

மற்ற மீன்களுக் கில்லாத சுவாசக்கருவி இம் மரந்தொத்திக்கு உண்டு. ஆகையால் நீர்ப்பரப்பின் மேலே இருக்கும்பொழுது அது காற்றிலிருந்து நேர்முகமாகப் பிராணவாயுவைப் பிரித்து உட்கொள்ளுகின்றது. நம்மைப்போலவே அதுவும் வாய்வழியாக மூச்சு வாங்கவும் மூச்சுவிடவும் செய்கின்றது.

# மரம் ஏறும் மீன்

நீர்வற்றிய ஏரிகளிலிருந்து அவை கூட்டங் கூட்டமாக, தட்டுக் கெட்டுத் தடுமாறித் தரையின்மீது தொத்தி யேறுவதும், புல்லிலும், மணலிலும் நகர்ந்து செல்வதும், காண்டற் கரிய ஒரு அற்புதக்காட்சியே. இயல்பாக அமைந்துள்ள உணர்ச்சி அறிவினுல் நீர் நிலைக்குள்ள வழியை அறிந்து பிரயாணஞ் செய்கின்றது. சிலவேளை, இரண்டு மூன்றுநாள் இரவும் பகலும் இடையருது பலநாழிகை தூரம் பிரயாணம் செய்வது முண்டு. அவ்வாறு நகர்ந்து பிரயாணம் செய்யுங் காலத்து சுவாசக்கருவி உலர்ந்துபோகா திருக்குமாறு தன் சரீரத்திலுள்ள ஈரத்தை எவ்வாருே அதில் (சுவாசக்கருவியில்) பரவச்செய்கின்றது.

ஒருநாள் மத்தியான வேளையில் ஒரு கூட்டம் மரந்தொத்திகள் தூசிபடிந்து வெப்பம் மிக்க ஒரு ரஸ்தாவின் வழியாகப் பிரயாணஞ் செய்யக் கண்டதாக ஒரு ஆங்கிலப் பிரயாணி கூறுகின்ருர்.

அவை சாதாரணமாக இரவுதான் பிரயாணஞ்செய்யும். மேலே கூறியபடி நடுப்பகலில் பிரயாணம் செய்ததற்கு ஏதேனும் பிரத்தியேக காரணங்கள் இருந்திருக்க வேண்டும்.

அவை நீர்நிலைகளைவிட்டு நீங்குவதை உற்றுநோக்கிய பிரயாணிகள், அவை எப்பொழுதும் கூட்டம்சேர்ந்து விரைவாகப் பிரயாணம் செய்வதாகக் கூறுகின்ருர்கள். வழிநடுவில் எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் மனந்தளராது முன்னேறிச் செல்லுமாம். செங்குத்தான மேடுகளிலும், ஆழமான வண்டிச்சக்கரச் சுவடுகளிலும் சிறிதளவேனும் மனச்சலிப்பின்றி ஒழுங்காகச் செல்லுமாம். சிலவேளை அவை பறவைகளுக்கு இரையாவ துண்டு. மனிதர்கள் கையில் அகப்பட்டு நாசமடைவது முண்டு. ஆயினும் மனிதர் கண்ணுக்கும் பறவைகளின் கண்ணுக்கும் தப்பித்துக்கொள்வதில் மரந்தொத்திக்கு இணையான திறமை வேறெந்தப் பிராணிக்கும் இல்லையென்றே சொல்லலாம்.

இதுவரையிலும் அது புல்லிலும் மணலிலும் நகர்ந்து செல்வதைத் தான் பாராட்டிக் கூறினேம். அது மரந்தொத்தி யென்ற பெயர் பெற்ற வரலாற்றை நாம் இதுகாறும் கவனிக்கவில்லை. இதுவே மரந்தொத்தியின் அதி விநோதமான சிறந்த குணம். ஏனெனில் அது மெய்யாகவே மரத்திலேறும் சக்தி யுடையது.

மீன்களுக்கு மரமேற முடியுமென்று வெகு காலமாக சாஸ்திரக்காரர் (Men of Science) நம்பவில்லை, மரமேறுவதைக் கண்ணுரக்

கண்ட அநேக ஐரோப்பியப் பிரயாணிகளின் சாட்சியம் லபித்தபிறகு சாஸ்திரக் காரரெல்லாம் இப்பொழுது ஒருமுகமாக நம்புகின்றனர்.

சோழமண்டலக் கரையில் மரந்தொத்திகள் ஒரு பனைமீது ஏறுவதை ஒரு ஐரோப்பிய தாவர சங்கமதத்துவ சாஸ்திரி பிரத்தியட்சமாகக் கண்டாராம். அதில் ஒரு மரந்தொத்தி ஒரு பனையின்மீது ஐந்தடி உயரம்வரை நகர்ந்து சென்றதாம்.

அது ஏன் மர மேறுகிறதென்று ஒருவராலும் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. நீர் தேடி மர மேறியதாக எண்ண இடமில்லை. ஏனென்றால் மரந்தொத்தி ஏறின பனைமரம் ஒரு ஏரிக் கரையில் நின்றதாம். உணவுக்காக மரமேறியதாகவும் கொள்ள வகையில்லை. ஏனெனில் நீரிலுள்ள புழுக்களே அதன் தீனி. மரத்திலிருந்து எப்படிக் கீழிறங்குகிற தென்றும் ஒருவரும் இதுவரையிலும் அறிந்தபாடில்லை. சுவாசக் கருவியை மூடியிருக்கும் உறை சிறகு இவற்றின் முள்ளெலும்புகளின் அமைப்பைக் கவனித்தால் அதற்கு மரமேற முடியுமேயன்றி இறங்கமுடியா தென்றே ஊகித்தற் கிடமுண்டு.

இறைவனது சிருஷ்டிப் பொருள்களில் நமது மரந்தொத்தி ஒரு விநோதமான பிராணி. அதன் வரலாற்றைப்பற்றி இதுகாறும் கூறியவற்றினு மேலாக நமக்கு அறிய முடியாமைக்கு, நண்பரே! நீர் வருந்துகின்றீரா?

---

## பாட்டு

ஈசனார்தம் பெருமையைப் பாடவோ?  
எந்தை நாட்டின் பெருமையைப் பாடவோ?  
நேச மாதர் அழகினைப், பூவினை,  
நீலவானத் தெழிலினைப் பாடவோ?  
வீசு தென்றல் இனிமையை, மாலையை,  
மின்னு வெண்டிரை வாரியைப் பாடவோ?  
மாசகன்ற புலவருக் குள்ளதாம்  
வண்மை யொன்றிலன் மற்றெதைப் பாடுகேன்?

# சிறுவர்கள் பகுதி

## கனவுப்பொடி

(ஸ்ரீமதி பொன்னம்மாள்)

குழந்தைகளே! உங்களுக்கு ஒரு சிறு கதை. நாகப்பன் ஒரு வேட்டைக்காரன். அவன் ஒரு காட்டில் அழகிய சிறு குடிசையில் வசித்து வந்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் குயில் மொழி. அவள் பேசுவது குயில் கூவுவதுபோல் இருந்ததனுல் அவளுக்கு அந்தப் பெய ரிட்டான்.

நாகப்பன் அடிக்கடி காட்டில் வேட்டையாடப் போவான். வேட்டை அகப்படாத காலங்களில் இரண் டோ மூன்றோ நாள் காட்டில் தங்கி விடுவான். சிலவேளை ஒரு வாரமோ அதற் கதிகமோ தங்கினுலும் தங்குவான்.

அக்காலங்களில் குயில்மொழி குடிசையில் தனிமை யாக இருக்க மிகவும் பயப்படுவாள். அவள் சிறு குழந்தை யாய் இருந்தபொழுதே அவளுடைய தாய் இறந்து விட் டாள். பேச்சுத் துணைக்குக்கூட அங்கே ஒருவரும் இல்லை. இரவு பட்டதும் ஓநாய்கள் ஒரு பக்கம் கத்தும்; நரி ஒருபக்கம் ஊளையிடும்; யானை ஒருபக்கம் உறுமும்; சிங்கம் ஒருபக்கம் கர்ஜிக்கும். இதையெல்லாம் கேட்டுக் குயில்மொழி எப்படிச் சகித்திருப்பாள்!

ஒரு நாள் நாகப்பன் வழக்கப்படி வேட்டைக்குப் புறப் பட்டபொழுது குயில்மொழி அவன் இல்லாத காலங்களில் தான் படும் கஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொன்னுள். நாகப்பன் மகளிடத்து மிகவும் அன்புடையவன். ஆகவே அவன் அன்று வேட்டைக்குப் போகவில்லை.

வேட்டைக்குப் போகாமல் இருந்தால் வயிறு நிறைப்ப தெப்படி? அவனுக்குத் தோட்டங்களோ வயல்களோ கிடையா, கையிருப்பாகப் பணமும் இல்லை. ஆகவே போகா

மல் இருக்கவும் முடியாது. ஆகையால் அவன் ஒரு உபாயம் எண்ணினான்.

அந்தக் காட்டின் ஒரு பக்கத்தில் ஒரு சூனியக்காரக் கிழவி இருந்தாள். அவள் மந்திரத்தில் மிகவும் தேர்ச்சி அடைந்தவள்; பச்சிலைகளின் குணங்க ளெல்லாம் நன் கறிந்தவள். நாகப்பன் அவளிடம் சென்று, தன் வருத் தங்களை எல்லாம் சொன்னான். உடனே அவள் சில உலர்ந்த பச்சிலைகளைக் கல்வத்தி லிட்டுப் பொடித்துச் சூரணமாக்கி, ஒரு காகிதத்தில் பொதிந்து மடக்கி, 'கனவுப் பொடி' என்று பெயரும் எழுதி—"அப்பா! இதைக் கொஞ் சம் பாலில் கலக்கி உன் மகளுக்குக் கொடு" என்று நாகப் பனிடம் கொடுத்தாள்.

"அம்மா! இது விஷ மல்லவே? அவளுக்கு ஒரு கேடும் செய்யாதே?" என்று நாகப்பன் வெகு உருக்க மாய் வினவினான்.

"ஆ! ஆ! நீ ஒரு பைத்தியக்காரன், உன் மகளுக்கு விஷம் கொடுத்து எனக்கு ஆகவேண்டிய தென்ன? நீ வருந்திக் கேட்டதனால் நான் கொடுத்தேன். கடவுள் கிருபையால் நான் கற்றதை, பிறருக்கு உபகாரப்படுத்தா மல் இருக்க நான் கல்நெஞ்சம் உடையவள் அல்ல. இந்தப் பொடியினால் உன் மகளுக்கு ஒரு தீமையும் உண்டாகாது. இது உள்ளுக்குச் சென்றவுடன் சுகமாய்த் தூங்குவாள். நீ திரும்பிவர எத்தனை நாள் ஆனாலும் அதுவரையிலும் தூங்கிக்கொண்டே இருப்பாள். தூங்கும் காலமெல்லாம் அவள் மனோகரமான கனவும் காண்பாள். ஆனால் அவள் வளர்ச்சிக்கு ஒரு தடையும் ஏற்படாது. அவள் வளர வளர அவளது உடையும் வளர்ந்து கொண்டே போகும். அவள் விழிக்கும்வரை அவளுக்கு உணவும் வேண்டாம். நான் கூறிய இவ்வளவும் உண்மை. உனக்கு இஷ்டமிருந் தால் கொடு; இல்லாவிட்டால் காற்றில் பறத்திவிடு என் றாள் சூனியக்காரி.

கிழவியின் அழுத்தமான மொழிகளை நாகப்பன் நம்பி னான். அவளுக்கு நன்றி கூறி, தன் குடிசைக்குத் திரும் பினான்.



ஜி. சுப்பிரமணிய ஐயர்.

நம் தமிழ் நாடு நலம் பெற, அதனை நெடுந் துயிலினின்றும் விழிப்புறச் செய்தவரும், ராஜீய ஞானமும் தேசிய உணர்ச்சியும். நம் நாட்டினரிடையே பரவிப் பெருகுமாறு தம் கால மெல்லாம் ஓயாது உழைத்த வரும், தமிழ் மக்களுக்குப் பத்திரிகா ஞானம் என்னும் அமிர்தத்தை ஊட்டியவரும், இன்றும் எங்கும் பிரகாசமாய் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்ற "ஹிந்து" "சுதேசமித்திரன்" பத்திரிகைகளின் ஸ்தாபகரும், நம்மவரின் எதிர்கால மேம்பாட்டிற் கெல்லாம் மூலகாரணமாய் விளங்கிய வருமான மஹா புருஷர் இவரே யாவர்.

## கனவுப் பொடி

குடிசையை அடைந்ததும் அங்குள்ள சாமான்களை எல்லாம் அததன் ஸ்தானத்தில் ஒழுங்காய் வைத்தான். தன் மகளுடைய சிறு கட்டிலை, குடிசைச் சாளரத்தண்டை போட்டான். விசேஷ தினங்களில் குயில்மொழி அணியும் ஆடைகளை அவளுக்கு அணிந்து கட்டிலில் படுக்கச்சொன்ஞன், அவளும் அப்படியே படுத்தாள். கனவுப் பொடியைப் பாலில் கலந்து கொடுக்க, குடித்த உடனே நித்திரை போனுள். நாகப்பன் தான் வேட்டையாடிய மலையணில், காட்டுப்பூனை முதலியவற்றின் தோலினல் செய்யப்பட்ட ஒரு போர்வையால் அவளுக்குக் குளிர் தட்டாதிருக்கும்படி மூடினுன். அவள் சுகமாய் நித்திரை செய்வதைப் பார்த்தவுடன் அவன் மனம் பூரித்தது. அன்புள்ள பெற்ருேர்க்கு குழந்தைகளின் தூக்கமும் நகைப்பும் பேச்சும்—மற்றும் செய்கைகளும்—மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியனவே.

பின்னர் நாகப்பன் வேட்டைக்குப் பிரயாணம் ஆனுன். அந்தக்காட்டில் அவன் பலமுறை சஞ்சரித்தவன்; அதன் ஒவ்வொரு காலடிப்பாதையும் அவனுக்கு நன்ருகத் தெரியும். ஆனல் துர்ப்பாக்கிய வசத்தினல் அன்று வழிதப்பி விட்டான். வெகு நேரம் சுற்றி யலைந்தும் அவன் போக வேண்டிய வழி அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. அலைந்தலைந்து அலுத்தான். ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். களைப்பு மிகுதியால் மெய்மறந்து தூங்கலானுன்.

விழித்தபொழுது சூரியோதயம் ஆகி வெகுநேரம் சென்றிருந்தது. உடனே அவசரமாய் எழுந்து நேர்முகமாக அப்புறம் இப்புறம் அணுவளவும் மாருமல் நடந்தான். சூரியாஸ்தமனம் ஆனதும் காலையில் புறப்பட்ட இடத்தை அடைந்தானே யொழிய, நேர்வழியைக் கண்டுபிடிக்க அவனுக்கு முடியவில்லை. இவ்வாறு பலநாள் சென்றன. அவன் கையில் இருந்த உணவுப்பொருள்கள் எல்லாம் செலவாயின. வேட்டையாடலா மென்ருல் ஒரு பிராணியாவது அவன் கண்ணில் படவில்லை. ஐயோ! ஏழை என்ன செய்வான். இரண்டுநாள் முழுப்பட்டினியாக, மூன்ரும்நாள் நடக்கச் சக்தியற்றுப் பூமியில் விழுந்தான். கடும்பசியோடு இரை தேடி அலைந்துகொண்டிருந்த ஒரு சிங்கம் அவனை விழுங்கி விடவேண்டிப் பாய்ந்துவிட்டது.

குயில்மொழியோ குடிசையில் நெடுந்தூக்கம் தூங்கினுள். நாளேற ஏற அவள் உடம்பும் உடையும் வளர்ந்து கொண்டே இருந்தன. குயில்மொழி பிள்ளைப்பருவம் கடந்து மங்கைப்பருவம் அடைந்தாள். குடிசை நடுக்காட்டுக்குள் செடிமறைவில் கட்டப்பட்டிருந்ததனுல், கும்பகரண ஸேவையில் இருந்த குயில்மொழியை ஒருவரும் காணமுடியவில்லை.

அந்தக் காட்டின் வட எல்லையில் ஒரு அரண்மனை இருந்தது. அதில் ஒரு அரசனும் அரசியும் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு வீரியசிங்கன் என ஒரே ஒரு மகன் இருந்தான். அரசனுக்குப் பிறகு அவனே பட்டத்துக்கு உரியவன். அரசனே கிழப்பருவம் அடைந்திருந்தான். ஆகையால் வீரியசிங்கனுக்கு ஒரு நல்லபெண்ணைத் தேடி மாலையிட்டுத் தன் காலத்திலேயே அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டவேண்டுமென்று அரசன் எண்ணினுன். வீரியசிங்கன் வந்த ராஜகுமாரிகளை யெல்லாம் ஒவ்வொரு குற்றங்கூறித் தள்ளிவிட்டான். ராஜ புத்திரிகளில் ஒருத்தியாவது அவனுக்குப் பிடிக்காதாகவே சாமானியப் பெண்களை அரசன் வருத்திப் பார்த்தான். வீரியசிங்கன் வந்தவர்களை எல்லாம் பழித்துக்கூறி அனுப்பினுனேயன்றி ஒரு பெண்ணையாவது கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. இதனுல் அரசனும் அரசியும் மிகவும் கவலைகொண்டார்கள்.

பீஷ்மரைப்போல் வீரியசிங்கன் நித்தியப் பிரம்மசாரியாக வாழத் துணிந்தால் பிற்காலத்தில் நாட்டின்கதி என்னுகுமோ என்று அவர்கள் ஏக்கங்கொண்டார்கள்.

வீரியசிங்கனுக்கு வேட்டையாடுவதில் வெகுபிரியம். ஒருநாள் சில வீரர்களையும் அழைத்துக்கொண்டு சிங்க வேட்டைக்குப் புறப்பட்டான். அவன் ஏறிச்சென்ற குதிரை அவனைப்போல் வீராவேசங்கொண்ட புதுக்குதிரை. ஆகவே காட்டை யடைந்ததும் குதிரை வாயுவேகம் மனோவேகமாக ஓடத் தொடங்கிற்று. வீரியசிங்கன் தன் வீரர்களைப் பிரிந்து தனியனுனுன். குதிரையோ பின்னும், பின்னும் ஓடிக்கொண்டே இருக்கிறது. வீரியசிங்கன் குதிரையை நிறுத்த எவ்வளவோ முயன்று பார்த்தான், முடிய

வில்லை. கடைசியாக அது தானே அலுத்து நின்றது. குதிரை நின்றதும் நாலா பக்கமும் பார்க்கும்போது, ஒரு பக்கத்தில் ஒரு சிங்கம் ஒரு மனிதன் மேல் பாய்வதைக் கண்டு ஒரு அம்பை எய்தான். அது பட்டுச் சிங்கம் வீழ்ந்தது. அந்த ஆபத்துக்குத் தப்பிய அம்மனிதன் யார்? நமது நாகப்பனே. பொழுது சாயும் தருணமும் ஆயிற்று. வீரியசிங்கனுக்குப் பசி மிகுந்தது, தாகம் மேலிட்டது. ஆகவே அரண்மனைக்குப் போகும் வழியைத் தேடி அங்குமிங்கும் நடக்க, நமது நாகப்பன் குடிசையைக் கண்ணுற்றான்.

குடிசையைக் கண்டதும் அவன் சஞ்சலமெல்லாம் நீங்கிற்று. ஏதாவது தின்றோ குடித்தோ பசியாறலாமென் றெண்ணிக் குடிசை வாயிலை அடைந்தான். குடிசைத் தலை வாயில் அடைக்கப்பட் டிருந்தது. கதவைத் தட்டினான்; பதில் இல்லை. உற்றுக் கேட்டான்; ஆளரவம் இல்லை. சாள ரத்தண்டை சென்றான். அங்கே குயில்மொழி உறங்கு வதையும், கட்டிலின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த பூச் செடிகள் எல்லாம் வாடி யிருப்பதையும், குடிசைக்குள் ளிருந்த சாமான்களில் எல்லாம் ஒன்றிரண்டடிப் புழுதி படிந்திருப்பதையும் பார்த்தான்.

"என்ன ஆச்சரியம்! ஆள்வாச மில்லாத இந்தக் குடி சையில் இவ்வழகிய மங்கை தூங்க நேர்ந்த காரணம் என்ன? குடிசைத் தோற்றத்தைப் பார்த்தால் இவள் நெடுங்கால மாகத் தூங்குகிறதாகத் தோற்றுகிறதே, ஒருவேளை இவள் விழியாத் துயில்தான் கொண்டாளோ?" எனத் தன் னுள்ளே எண்ணிக்கொண்டு, சாளரத்தின் வழியாய்க் குடி சைக்குள் புகுந்தான்.

குடிசை முழுதும் சோதனை செய்தான். ஒருவரும் இல்லை. ஸமீப காலத்தில் அங்கே யாராவது இருந்ததாக ஒரு அடையாளமும் இல்லை. எனவே அவன் கொண்ட வியப்பு பதின்மடங் காயிற்று. மெல்ல மெல்லக் குயில்மொழியின் பாதங்களைத் தொட்டான்; அசைத்தான்; கிள்ளினான், அவள் முன்போலவே கிடந்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க அவனை அறியாமலே அவள்மீது அவனுக்குக் காதல் உண்டாயிற்று. காதல் உண்டாகப் பசியையும் மறந்தான்;

வெளியில் கட்டிய குதிரையையும் மறந்தான் ; நாட்டையும் மறந்தான் ; பெற்ருேரையும் மறந்தான் ; இருள் கவிந்ததை யும் ஓர்ந்திலன் ; குயில் மொழியின் கால்மாட்டில் சித்திரப் பதுமைபோல் அசைவற் றிருந்தான்.

சூரியோதயமும் ஆயிற்று. குயில்மொழி கண்விழிக்க வில்லை. "இது பெரிய மாயமாகவே இருக்கிறது. இவளை இங்கே தனியேவிட்டுச் செல்வது சரி யல்ல. அரண்மனைக் குக் கொண்டுபோய் இவளை எழுப்புவதற்கு ஏதாவது வழி பார்க்க வேண்டும்" எனத் தேறி அவளைப் படுக்கையோடு வாரியெடுத்து, குதிரைமேல் ஏற்றி, தானும் ஏறி, அரண் மனையை நோக்கிக் குதிரையைச் செலுத்தினன்.

வீரியசிங்கன் கூட வேட்டைக்குச் சென்ற வீரர்கள் அனைவரும் மறுநாள் மாலை அரண்மனையை அடைந்தார் கள். வீரியசிங்கன் தங்களைப் பிரிந்து சென்றதையும் அரச னிடம் கூறினர்கள். அரசனும் அரசியும் வீரியசிங்கன் பாடு என்னயிற்ருே என வருந்தி இரவு முழுதும் தூங்க வில்லை. மறுநாள் காலை மகனைத் தேடுவதற்கு நாலுபக்கங் களிலும் ஆட்களை அனுப்பிவிட்டு, அவர்கள் அரண்மனை யில் பெரிதும் துயரமுற் றிருந்தார்கள்.

தேடச் சென்றவர்களில் சிலர் வீரியசிங்கன் வருவ தைக்கண்டு முன்னதாக ஓடி அரசனிடம் தெரிவித்தார்கள். அரசனும் அரசியும் பெருமகிழ்ச்சி கொண்டு மகன் வரவை எதிர்பார்த்து அரண்மனைத் தலைவாயிலில் நின்ருர்கள்.

வீரியசிங்கன் குயில்மொழி ஸகிதம் குதிரையிலிருந்து இறங்கித் தாய் தந்தையரை வணங்கினன்.

இராணி ஆச்சரியமடைந்து "இவள் யார்? இறந்து விட்டாளோ?" என ஆர்வத்தோடு கேட்டாள்.

"இல்லை! இல்லை!! இறக்கவில்லை. மாயத்தூக்கம். பள்ளியறையிற் சேர்த்துவிட்டு எழுப்புவதற்கு வகைதேட வேண்டும். இவளையே நான் மாலையிட எண்ணிவிட்டேன்." எனக்கூறித் தன் பெற்ருேர் முகத்தை உற்றுநோக்கினன் வீரியசிங்கன்.

ஏனென்றால் அவளை மாலையிட, பெற்றோர் சம்மதிப்பார்களோ என்று அவன் சந்தேகித்தான்.

அவர்களோ அவன் மாலையிட ஒப்புக்கொண்டதே பெரிய காரியமென்றெண்ணி, அவன் இஷ்டப்படியே ஸம்மதித்து, பெண்ணின் வரலாற்றைக் கேட்டார்கள்.

அவளை முதலில் கண்டது முதல் அரண்மனைக்கு எடுத்துச்சென்றதுவரை, சகல விருத்தாந்தங்களையும் வீரியசிங்கன் ஸவிஸ்தாரமாகச் சொன்னான்.

"இவள் ராஜகுமாரியாகத்தான் இருக்கவேண்டும். இப்படி நெடுந்தூக்கம் தூங்குவதின் காரணந்தான் விளங்கவில்லை" என்றாள் இராணி.

அரசன் சேவகர்களை அழைத்து அரண்மனை மணிகளையெல்லாம் கொண்டுவந்து குயில்மொழி காதண்டை அடிக்கச் சொன்னான். அப்படியே அடித்தார்கள். குயில்மொழியின் விழி துயில் நீங்கவே இல்லை. அந்நாட்டிலுள்ள தோல்கருவி துளைக்கருவிகளை எல்லாம் கொண்டுவந்து முழக்கினார்கள், அவள் கண்விழிக்கவில்லை; படை ஸ்தலத்திலுள்ள பீரங்கிகளையெல்லாம் கொண்டுவந்து ஏககாலத்தில் கொளுத்தினார்கள். என்றாலும் அவள் கண் திறக்கவில்லை.

யாவரும் பெரும் வியப்படைந்தார்கள். அரண்மனை வயித்தியர்கள் பல மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தார்கள். ஒரு பயனும் உண்டாகவில்லை. கடைசியாக அரண்மனை வேலைக்காரிகளில் ஒரு கிழவி ஒரு ஆலோசனையுடன் முன்வந்தாள்.

"அரண்மனையை அடுத்த காட்டின் மத்தியில் ஒரு சூனியக்காரி இருக்கிறாள். அவளை எனக்கு நன்றாகத் தெரியும். என் தகப்பன் ஒருமுறை அவள் உயிரைக் காப்பாற்றினார். ஆகையால் அவள் என் இஷ்டப்படி எதுவும் செய்வாள். நான் ஒரு கடிதம் கொடுக்கிறேன். இந்தப் பெண்ணை அவளிடம் காட்டி, என் கடிதத்தையும் கொடுத்தால், மந்திர சக்தியினால் இவளை எழுப்பிவிடுவாள். நிச்சயம். நான் சொல்வதை நம்புங்கள்" என்றாள் அக்கிழவி.

அப்படியே யாவரும் சம்மதித்தார்கள். ராஜகுமாரன் குயில்மொழியைத் திரும்பவும் குதிரைமேலேற்றிக்கொண்டு புறப்பட்டான். கிழவி கடிதமும் கொடுத்து சூனியக்காரி இருக்கும் இடத்தின் அடையாளங்களெல்லாம் விரிவாகக் கூறி அனுப்பினுள்.

வீரியசிங்கன் அதிகப் பிரயாசையில்லாமல் சூனியக் காரியின் குடிசையை அடைந்து கதவைத்தட்டினுன். சூனி யக்காரி கதவைத் திறந்தாள். ராஜகுமாரன் தூங்கும் பெண் ணைக் கையில் ஏந்திக்கொண்டு நிற்பதைப்பார்த்து சிறிது நடுக்குற்றுள். "நீ யார்? இங்கே வந்த காரியம் என்ன" என்று துடுக்காய்க் கேட்டாள். ராஜகுமாரன் தன் வரலா றெல்லாம் கூறி வேலைக்காரியின் கடிதத்தையும் அவளிடம் கொடுத்தான். கடிதத்தை அவள் வாசித்து முகமலர்ச்சி அடைந்தாள்.

"சரி! பெண்ணை இங்கே விட்டுவிட்டுப் போ. நாளைக் காலையில் வந்தால் அவள் துயில் விழித்திருப்பாள். கூட் டிக்கொண்டு போ" என்று அவள் புன்னகையோடு சொன் னுள். இத்தருணத்தில் நமது நாகப்பனும் பல நாள் அலைந்துகெட்டு அப்போது தான் அங்குவந்து சேர்ந்து இவர்களைக் கண்டு பிரமித்தான்.

ராஜகுமாரனும் அவளுக்கு வந்தனம் சொல்லிப் போய் விட்டான்.

இந்தச் சூனியக்காரி தான் நாகப்பனுக்குக் கனவுப் பொடி கொடுத்தவள். ஆகவே அதற்கு மாற்றுன்பொடி யொன்று விரைவில் உண்டாக்கி, குயில்மொழியின் நாசித் துவாரங்களில் வைத்து ஊதினுள். நாளேறி விட்டபடி யால் கனவுப்பொடியின் வீரியம் எளிதாக முறியவில்லை. மறுநாள் சூரியோதயமான பொழுதுதான் குயில்மொழி கண்திறந்தாள். பக்கத்திலிருந்த கிழவியைக் கண்டு திகைத் தாள்.

"குழந்தாய்! பதருதே, நீ நெடுநேரம் தூங்கிவிட் டாய், சிறிது அமைதியாய் இரு" என்றுள் கிழவி.

குயில்மொழி நாகப்பனைக் கண்டு அப்பா என்று கட்டிக் கொண்டாள். பின் தன் கனவில் கண்ட ராஜகுமாரனின் நினைவுவர உடனே அந்த ஆணழகன் எங்கே?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

"இப்பொழுது வந்துவிடுவான், நீ அதற்குள் ஸ்நானம் பண்ணி ஆடையணிகள் அணிந்து அலங்காரம்செய்து கொள்" என்றாள்.

குயில்மொழி ஆநந்தத்தோடு எழுந்தாள். சூனியக்காரி மந்திர சக்தியால் பல பரிமளப் பொருள்கள் கலந்த வாசனை நீர் வருவித்து, குயில்மொழியை நீராட்டினாள். பல பட்டாடைகளும் நவரத்ந கசிதமான ஆபரணங்களும் அவளுக்கு அணிந்தாள்.

ராஜகுமாரனும் உடனே வந்தான். குயில்மொழியைக் கண்டு ஆநந்தம் கொண்டான்.

"அப்பா! குயில்மொழியை அழைத்துக்கொண்டு போ. அவளை மணந்து பூவும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும் மனமொத்து வாழ்ந்திரு" என ஆசிர்வதித்தாள் சூனியக்காரி.

பிரதி யுபகாரமாக ராஜகுமாரன் பல பரிசுகளை அவளுக்கு வழங்கப் போனான்.

கிழவி அவன் பரிசுகளைப்பார்த்து நகைத்து—"உன் பரிசெல்லாம் கிழவிக்கு எதற்காக? அடிக்கடி நீ வந்து உங்கள் க்ஷேமத்தைத் தெரிவித்துக்கொண் டிருந்தால் போதும்—" என்றாள்.

ராஜகுமாரன் அவளுக்குப் பன்முறை வந்தனங்கூறி, குயில்மொழியை அழைத்துக் கொண்டு, நாகப்பனோடு அரண்மனைக்குத் திரும்பினான்.

அரசனும் அரசியும் அவர்களை மகிழ்வுடன் எதிர்வந் தழைத்து நல்வரவு கூறினார்கள். மறு வாரம் வீரியசிங்கனுக்கும் குயில்மொழிக்கும் கோலாஹலமாக விவாகம் நடந்தது. விவாகம் முடிந்த தோடு வீரியசிங்கன் இளவரசனானான். இருவரும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். நாகப்பன் தன் மகளிடமே இருந்து மகிழ்ந்தான்.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

## 1. பிறப்பு.

தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள பண்ணுருட்டி ரெயில் ஸ்டேஷனிலிருந்து மேற்கே உளுந்தூருக்குப் போகும் வழியில் பதினொரு மைல் சென்றால் *திருநாவலூர் என்னும் ஸ்தலம் இருக்கின்றது. இத்தலம் இப்போது திருநாம நல்லூர் என வழங்கி வருகின்றது. இத்தலத்தில் சுமார் ஆயிரத்து நூறு வருடங்களுக்கு முன் சிவபிரானுக்கு வழி வழியடிமை பூண்ட ஆதி சைவ வேதியர் குலத்தில் சடையனார் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி கற்பிற் சிறந்த இசைஞானியார். இவர்களுக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்குத் திருவாரூர்ச் சிவன் பேர் வைக்க வேண்டி † நம்பியாரூரர் எனப் பெயரிட்டனர். குழந்தையின் பொலிவைக் கண்ட அந்நாட்டு அரசனாகிய ‡ நரசிங்க முனையர் அக்குழந்தையைத்

---

* இத்தலமுள்ள நாட்டுக்குச் சுவாமிகள் காலத்தில் திருமுனைப்பாடி நாடு என்று பெயர்.

† "சீரூருந் திருவாரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த ஆரூரன்" [86]

‡ சிவபிரானையுந் தனது மகளையுங் காண ஆசை மிகுந்த இமைய மலையரசன் நந்திதேவரின் அநுமதியின்றிக் கயிலைத் திருக்கோயிலின் உட்செல்ல, அந்தப்புரத்திருந்த சிவபிரான் அதைக் கண்டு "நந்தியைக் கேளாதுஞ் சமயந் தெரியாதும் வந்த குற்றத்துக்காக மலையரசனை "மாநுடனாகுக" என்றனர். மலையரசனுந் திருக்கோயிலூரிற் குக முனிவரது வேள்வித் தீயிற் றோன்றி தெய்வீக ராஜன் என்னும் பெயரோடு விளங்கிச் சேர சோழ பாண்டியர்களுடைய பெண்களைத் திருமணஞ் செய்தனன். இந்தத் தெய்வீக ராஜனுக்கும் பாண்டியன் மகள் காஞ்சன மாலைக்கும் பிறந்தவர் மெய்ப்பொருள் நாயனார். தெய்வீக ராஜனுக்கும் சேரன் மகள் பத்மாவதிக்கும் பிறந்தவர் நரசிங்க முனையர். [இதன் விரிவைத் திருக்கோவலூர்ப் புராணத்திற் காண்க.]

தமது மகவாகக் கொண்டு வளர்ப்பதாக அதன் பெற்றோரிடம் உத்தரவு பெற்று அவ்வாறே வளர்த்துவந்தார்.

## 2. தடுத்தாட் கொள்ளப் பட்டது.

நம்பியாரூரருக்கு மணப்பருவஞ் சார்ந்தது. உத்தம பிராமணராகிய புத்தூர்ச் சடங்கவியாரின் கன்னிகையை மணம் பேசினர். நம்பியாரூரருக்கும் சடங்கவியாரின் கன்னிகைக்கும் மங்கல வாத்தியம் ஒலிப்பத் திருமணம் நடக்கும் சமயத்துச்சிவபிரான் வைதிக வேடத்துடன் மூப்பு முதிர்ந்த பிராமணராய்க் கையிற் குடையும், கோவண உடையுந் தளர்ந்த நடையுமாகத் திருமணப் பந்தரிற் சபை நடுவே வந்து நின்றனர். வந்தவரை நோக்கி மாப்பிள்ளையும் மற்று மங்குள்ள மறையவர் அனைவரும் "ஐயா! நாங்கள் செய்த பாக்கியத்தால் நீங்கள் இங்கு வரப்பெற்றோம்" எனக் கூறி மகிழ்ந்தனர். இதைக் கேட்ட வேஷத் தம்பிரான் மாப்பிள்ளையைப் பார்த்து "அப்பா! உனக்கும் எனக்கும் உள்ள பெரு வழக்கினை முன்பு முடித்துப் பின்பு கலியாண வேலையைக் கவனிப்பாயாக" என்றனர். மாப்பிள்ளையும் "உமக்கும் எனக்கும் ஏதேனும் வழக்குண்டேல் அதனையே முன்னர் முடித்துப் பின்னர் மணஞ்செய்வேன்! கூறுவீர் உமது வழக்கை" என்றனர். மறையவரும் "சரி கேளுங்கள்! இந்த நாவலாரூரன் என் அடிமை. இதுவே எனது வழக்கு" என்றனர். இதுகேட்ட நாவலாரூரர் "நன்று கூறினீர்!" எனப் பரிகசித்துச் சிரித்தனர். மறையவர் "எட! ஏன் சிரிப்பது! இதோ பார் உனது தந்தையின் தந்தை முன்பு எழுதிக்கொடுத்த அடிமை ஓலைச் சீட்டு" என்றனர். நாவலாரூரருஞ் சிரிப்பதைவிட்டு "ஓய்! மறையவரே! நீர் பித்தரோ! ஒரு மறையவன் பிறிதொரு மறையவனுக்கு அடிமையாத லுண்டு என்னும் நியாயத்தை இன்றுதான் கேட்டேன்" என்றனர். அதற்கு மறையவர் "நான் பித்தனுகட்டும், பேயனுகட்டும்! நீ என்ன சொன்னலும் எனக்கு நாண மில்லை. என்னை நீ அறியாவிட்டால் வீணுடம்பரப் பேச்சு ஒன்றும் பேசாதே! எனக்குப் பணி செய்யவேண்டுவது உன் கடமை" என்றார். இதைக் கேட்டுக் கோபங்கொண்ட நாவலாரூரர் "ஓலையைக் காட்டும்" என்றனர். மறையவர் "நீ ஓலைபார்க்க வந்தவனே? எனது வேலை பார்க்க வந்தவ னல்லவோ!" என்றனர்.

இதைக் கேட்டதும் நாவலாரூரர் எழுந்து மறையவர் கையி லிருந்த ஓலையைப் பறிக்க முயல, மறையவர் ஓட, ஆரூரர் அவரைத் தொடர்ந்து ஓடி ஓலையைப் பறித்து "அந்தண குலத்தோர் ஒருவருக்கு ஆளாய் அடிமையாவது கூட உண்டா?" எனக் கூறி ஓலையைக் கிழித்தெறிந்தனர். உடனே கிழப்பிராமணரும் "கூ! கூ! இது முறையோ! முறையோ!" எனக் கூவினர். அங்கிருந்த பிராமணர் யாவரும் "ஐயா! பெரியவரே! உமது இருப்பிடம் எது?" என்றனர். ஐயரும் "என்னிருப்பிடம் சமீபத்திலுள்ள வெண்ணெ நல்லூர் என்னுந் தலம். அது கிடக்கட்டும்! இவன் வலிய ஓலையைக் கிழித்ததாலேயே இவன் எனக்கு அடிமை என்பதை உறுதிப் படுத்திவிட்டான்" என்றார். ஆரூரரும் "உமது ஊர் வெண்ணெ நல்லூர் என்றீர்! வாரும்! அங்கே இந்த வழக்கைத் தீர்க்கலாம்" என்றார். மறையவரும் "சரி! சரி! அப்படியே வா! கிழிபட்டது நகல் ஓலை; மூல ஓலை வேறு என்னிடம் இருக்கின்றது. அதை அங்குக் காட்டி நீ அடிமை என்பதைச் சாதிக்கின்றேன் பார்" எனச் சொல்லித் தண்டூன்றி வழிநடந்தார். நம்பியாரூரரும் அவர் சுற்றத்தாரும் பின் சென்றனர். வெண்ணெ நல்லூரைச் சார்ந்ததும் அங்குள்ள வேத பாரகர்களுடைய சபையில் வித்தக வேஷக் கிழவர் "ஐயன்மீர்! இந் நாவலூர் ஆரூரன் என்பவன் என்னுடைய அடிமை என ஏற்பட்டுள்ள சாதனத்தைப் பற்றிக் கிழித்தெறிந்து உங்கள் முன் வந்துள்ளான். இதுவே என் முறையீடு" என்றார். அது கேட்ட சபையோர் "ஐயா! ஓலையைப்பற்றிக் கிழித்தெறிந்து விட்டால் வெற்றி உமது ஆகுமோ? நீர் என்ன சொல்லுகின்றீர்" என ஆரூரரை வினவினர். ஆரூரரும் "நீங்கள் கலையுணர் பெரியீர். நான் ஆதிசைவன் என்று உங்களுக்குத் தெரியும். இவ்வந்தணன் நான் தனக்கு அடிமை என்று வழக்கிடுகின்றான். இந்த மாய வழக்கு என் மனத்துக்கும் உணர்வினுக்கும் எட்டவில்லை" என்றனர். சபையோரும் வல்வழக்குக் கொண்டுவந்த மறையவரை நோக்கி 'ஐயா! அடிமை என்பதை நீர் சாதிப்பதற்குத் தக்க ஆதாரங் காட்ட வேண்டும்" என்றனர். மறையவரும் "நன்று! காட்டுகின்றேன்! மூல ஓலை உளது. ஆனால் அதுவும் கிழிபடாமல் நீங்கள் காப்பதாக உறுதி கூறவேண்டும்"

என்றனர். சபையார் "அதற்குத் தீங்கு வாராது காப்போம்" என்னக் கிழவரும் ஓர் ஓலைச் சுருளை நீட்டினர். அதைப் பிரித்துப் பார்க்க அதிற் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"நாவலூர் ஆதிசைவன் ஆரூரன் வெண்ணை நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கோடுத்த சாசனம் என்ன என்றல் ஷை பித்தனுக்கு யானும் என் மரபுளோரும் வழித்தோண்டு சேய்ய அடிமைப்பட்டோம். இது என் சோந்தக் கை யெழத்து.

ஆரூரன்."

உடனே சபையோர் இவ்வோலையிலுள்ள கையெழுத்தையும் நம்பியாரூரது பாட்டனூரது சொந்தக் கையெழுத்தையும் வரவழைத்து ஒத்திட்டுப் பார்க்க இரண்டும் சிறிதும் வேற்றுமை யில்லாது ஒத்திருக்க "ஐயா! நம்பியாரூரரே! தோற்றுப்போனீர்! என்ன செய்யப் போகின்றீர்! வேறு செயல் இல்லை" என்றனர். நம்பியாரூரரும் "விதி அப்படி இருந்தால் உடன்படுவதே கருமம்" என்றார். சபையோர் மறையவரை நோக்கி "ஐயா! நீர் காட்டிய சாசனத்தில் உமது ஊர் வெண்ணை நல்லூர் எனக் காட்டியிருக்கிறதே, உமது வீடு எங்கே? உமது மனைவி மக்கள் எங்கே? காட்டும்" என்றனர். கிழ முனிவரும் "ஓஹோ! நீங்கள் ஒருவரும் என்னை அறியீராகில் வாருங்கோள்! காட்டுகின்றேன்" என உரைத்து மறையவர் கூட்டமும் நம்பியாரூரரும் தம் பின் செல்ல அத்தலத்துத் திருக்கோயிலுக்குள் நுழைந்தனர். நுழைந்தவர் மறைந்தனர்; தொடர்ந்தவர் திகைத்தனர். திகைத்து நின்ற நம்பியாரூரர் காண இறைவன் இடப வாகனத்தின் மீது எழுந்தருளிக் காக்ஷி தந்து "நீ நமக்குத் தொண்டன். *பெண்ணாசை கொண்ட காரணத்

* திருக்கயிலையில் ஆலால சுந்தரர் என்னுந் திருநாமத்துடன் இறைவனுக்குத்தொண்டு புரிந்த காலத்து உமாதேவியின் சேடிமாரிற் கமலினி, அநிந்திதை என்பவரைக் கண்டு ஷை சுந்தரர் மோகங் கொண்ட காரணத்தால் இறைவன் ஆணைப்படி. அவர் இம் மண் மிசை நம்பியாரூரராகப் பிறந்தனர். அவரைக் கண்டு இச்சை கொண்ட கமலினி திருவாரூரிற் பரவை நாச்சியாராகவும், அநிந்திதை திருவொற்றியூரிற் சங்கிலி நாச்சியாராகவும் உமாதேவியின் கட்டளையின்படி பிறந்து சுந்தரரை மணந்தனர்: "இம் மண்ணுலகில் நரனாக வகுத்தனை." "பண்டே மிகநான் செய்த பாக்கியத்தாற் பரஞ்சோதி நின்னாமம் பயிலப் பெற்றேன்" என வரும் திருவரத்துறைத் தேவாரம் கவனிக்கற் பாலது.

தால் நமது ஏவலால் மண்ணின்மீது பிறந்தனை. உன்னை நாமே இம் மறையவர் கூட்டத்தின் முன்பு தடுத்தாட் கொண்டோம்'' என்றனர். இத் திருவாக்கைக் கேட்ட நம்பி பசுவின் கனைப்புக் கேட்ட கன்றுபோலக் கதறி நெக்கு நெக்கு உள் உருகி உருகி நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும், நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி நானு விதத்தாற் கூத்து நவிற்றிச் செக்கர் போலுந் திருமேனி திகழ நோக்கிச் சிலிர் சிலிர்த்து "இறைவா! நீயா வந்து வலிய ஆட்கொண்டாய்'' எனப் பன்முறை கூறிப் பரமானந்தம் மேற்கொள்ள விம்மி விம்மி யழுதனர். அச்சமயத்து விண்ணவர் பூமாரி பொழிந்தனர். இறைவன் பின்னும் நம்பியை நோக்கி நீ எம்முடன் வன்மை (வலிய பேச்சு) பேசினதால் "வன்றொண்டன்'' என்னும் * நாமம் பெற்றனை. எமக்கு உகந்த அர்ச்சனை அன்பு கலந்த பாடலே. ஆதலால் நம்மீது நீ தமிழ் பாடுக'' என்றனர். நம்பியாரூரரும் இறைவன் திருவடிகளைத் தியானித்து "இறைவா! கோதிலா அமுதே! உனது குணப் பெருங்கடலை யான் யாதென அறிந்து என் சொல்லிப் பாடுகேன்'' என்றனர். இறைவனும் "நீ வன்மை பேசினபோது என்னைப் 'பித்தன்' எனக் கூறினுய்; பித்தனென் றெடுத்தே பாடுதி'' என்றனர். நம்பியும்,

> "பித்தா பிறை சூடிபெரு மானேயரு ளாளா
> எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
> வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட் [டுறையுள்
> அத்தாஉனக் காளாயினி யல்லேன் என லாமே."

என்னும் (முதலாவது) திருப்பதிகத்தைப் பாடினர். "இவ்வாறே நமது புகழை நிரம்பப் பாடுவாயாக'' எனக் கூறி இறைவன் மறைந்தனர். நிற்க.

புத்தூர்ச் சடங்கவியாரின் கன்னிகை (கலியாணப் பெண்) நம்பியாரூரரையே தியானித்து ஈற்றிற் சிவலோகம் பெற்றனள்.

---

* "தன்மையினு லடியேனைத் தாமாட் கொண்ட நாட் சபை முன் வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர் வாழ்வு தந்தார்.''
(திருநாவலூர்த் தேவாரம்.)

# விநோதம்

புலவர் :—தங்களுடைய வீரப் பிரதாபத்தைக் கேட்டுத் தங்களைப் பார்க்கலாமென்று வந்தேன்.

பிரபு :—நல்லது, நல்லது, என்னாலாக வேண்டியதென்ன ?

புலவர் :—அவர் சொன்னாரங்கே ; வில்லிபுத்தூரார் பெரிய புராணத்தில் (!) சொல்லுகின்றார். அதாவது, அங்கே தமயந்தியும் (!) அரிச்சந்திரனும் (!) விபீஷணனை (!) ச் சந்திக்கிற கட்டத்திலே சொல்லுகிறார் :—(என்று புலவர் பாடுகிறார்.)

> ''ராவணன் சொன்னதெல்லாம் நன்றுடன் கேட்ட வீமன்
> தாவணச் சத்யகீர்த்தி தமயந்தி தானும் வந்து
> கோவணமாக லோக தாசனைக் கொண்டு சேர்த்தார்
> ஏவண மூடச் செல்வர் இதன் பொரு ளறிகுவாரே ! ''

(என்று பாடி 'எத்தானிதோம தானிதிம்தானி தொங்தோம்' என்று ஆலாபனம் செய்தார்.)

பிரபு :—ஆகா ! பேஷ் ! நன்றா யிருக்குது. பெரியவாள் வாக்கு எண்ணு தெரியாமலா சொன்னாக ?

புலவர் :—பாட்டை நன்றாய் மனதில் உட்கொண்டீர்களா ?

பிரபு :—ஆகா ! அப்பவே கொண்டாச்சு.

புலவர் :—எப்போது ? காலையிலேயே ஆய்விட்டதோ ?

பிரபு :—ஆமாமா, காலமேதான் ஆச்சுது.

புலவர் :—காலமே என்ன ஆச்சுது ? எத்தனை விசை ஆச்சுது ?

பிரபு :—அதுதான் நீங்க இப்போ சொன்னேளே அது.

புலவர் :—காலமே போஜனமாய் விட்டதென்று சொல்கிறீர்கள் ?

பிரபு :—ஆமா, ஆமா, போசனம்தான்.

புலவர் :—தங்களுடைய புத்தி நுட்பமும், தமிழறிவுந்தான் என்னென்று சொல்ல ? ஹா ! ஹா !

பிரபு :—என்னவோ பெரியவாள் கிருபையாலே நமக்குக் கொஞ்சம் தமிழில் ஞானமுண்டு.

(பிரபு சன்மானம் செய்கிறார். புலவரும் இவனைப் போல் புத்திசாலி கிடையாதென் றெண்ணிக் கொண்டு, கிடைத்ததைத் தட்டிக்கொண்டு வந்த வழியாய்ப் போனார்.)

# ஒரு வக்கீலின் விநோத பில்

ஒரு கக்ஷிக்காரன் தன் வழக்கு ஜெயித்ததற்காக வக்கீலை விருந்துக்கு அழைத்தான். உயர்வான சீமைச் சாராயங்கள், மற்றும் பழவாக்கங்கள் அவருக்குப் பரிமாறப் பட்டன. சாப்பாடு முடிந்ததும், வக்கீல் கக்ஷிக்காரனுக்கு வந்தனம் செய்து போய்விட்டார்.

மறுநாட் காலையில், வக்கீலின் பில் கலெக்டர் ஒரு பில்லைக் கொண்டுவந்து கக்ஷிக்காரனிடம் கொடுத்தார். அதாவது,

மிஸ்டர் தாராளப் பிரபு,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தங்கள் விருந்துக்காகக் கழித்த 1 மணி நேரத்திற்கு பீஸ் | ... | ... | ரூ. | 30 | 0 |
| பில் கலெக்டருக்கு | ... | ... | ,, | 0 | 1 |
| பில் பாரம் ... | ... | ... | ,, | 0 | 1 |
| | | ஆக மொத்தம் | ரூ | 30 | 2 |

இதைப் பார்த்ததும் கக்ஷிக்காரனுக்கு மிக்க கோபம் வந்து விட்டது. உடனே அவனும் ஒரு பில் எழுதி

| | | | |
|---|---|---|---|
| சாராயம் | ... | ரூ. | 7 |
| சாப்பாடு | ... | ,, | 3 |
| கூலி | ... | ,, | 2 |

ஆக ரூபாய் 12 க்கு அனுப்பினான்.

வக்கீல் ௰௨ ரூபாயைக் கொடுத்துவிட்டு, அந்த பில்லை ஆப்காரி இலாக்காவுக்கு அனுப்பி லைசென்ஸ் இல்லாமல் சாராயம் விற்றதற்குக் கேஸ் எடுக்கும்படி எழுதினார். பாவம், கக்ஷிக்காரனுக்குப் பெரிய தொகை அபாரதம் போடப்பட்டதால் அநியாயமாய் அழிந்து போய்விட்டான்.

☞ அவசரத்திலும் ஆத்திரத்திலும் சிறிது நிதானித்தல் என்றைக்கும் நன்று.

சு.

# அதிர்ஷ்ட வசம்

'அதிர்ஷ்ட முள்ளவன் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகு' மென்பது பழமொழி. 'ஆசையிருக்கிறது தாசில் பண்ண, அதிர்ஷ்ட மிருக்கிறது—கழுதை மேய்க்க'—என்பது மற்றொரு பழமொழி. இவை யாவும் அநுபவத்தில் சரியெனவே படும். ஒரு கிரந்தகர்த்தா தாம் எழுதிய சிலநூல்கள் இன்னும் அச்சுருவம் பெறாது பல ஆண்டுகளாய் மூலையிற்கிடக்க, நேற்று எழுதி முடித்த அவரது புதிய நூல் உடனே பதிப்பிக்கப்பெற்று வெளியாகிவிடுவதும் விசித்திரமேயாம். அப்புதிய நூலுக்கு அத்தனை துரிதத்தில் அதிர்ஷ்டதிசை இருந்ததுபோலும்! இப்படியே தமக்கைக்கு விவாகமாகிப் பல வருஷங்களாகியும், ஒரு குழந்தை கூட இல்லாதிருக்க, அவளுக்குப் பின் விவாகமான அவளது தங்கை நாலைந்து குழந்தைகட்கு நற்றாயாகி விளங்குகின்றாள். ஒரே தாயின் திருமணி வயிற்றில் உதித்த இரு சிறுமிகளில் ஒருத்தி செல்வ மக்கட்பேறுடனும் திவ்ய ஸத்கீர்த்தி ஓங்கிப் பர்த்தாவுடன் வாழ்ந்துகொண்டிருக்க, மற்றொரு பெண்ணோ கணவனார் வீடுசேர்ந்த அதேவருடத்தில் தானே பதியை யிழந்து அமங்களத்தைத் தேடிக்கொள்கிறாள். இது எதனால்? அதிர்ஷ்டத்தின் சூழல் அவ்விதம் செய்விக்கின்றது போலும்! பி. ஏ. பரீக்ஷையில் இருவருமே உயர்தரமாக ஏககாலத்தில் தேறினாராயினும், ஒருவர் காலமுற்றும் குமாஸ்தா வேலையிலேயே நாள் கழித்து நலியும்படியாக, மற்றவரோ மேன்மேலும் உயரிய உத்தியோக பதவிகளை ஏற்று உன்னதங் கொள்கின்றார். பணத்தைப் பைசாவாகக் கருதி வாரி இறைத்தும் கௌரவப் பட்டங்கள் கிடைக்காதுபோக, அதை எதிர்பார்த்து நின்றோர் பலர் ஏமாற, கனவிலும் அப்பட்டம் தமக்கு வருமென்று கருதாதார் சிலருக்குத் திடீரெனக் கிடைத்துவிடுகின்றது. இது அதிர்ஷ்டத்தின் கூற்றுத்தானே! சிலர் தொட்டதெல்லாம் பொன்னாய் விளைகின்றது. தொடங்கியதெல்லாம் அமோகமாய்ப் பெருகுகின்றது. எத்துணை முயற்சி — கல்வி — இருப்பினும் — அதிர்ஷ்டம் என்பது அங்கு இல்லையாயின், அந்தோ அன்னார் படும் துயரம்—சோதனை—மெலிவு—சோர்வு; சொல்லவுங் கூடுமோ? லக்ஷ்மிதேவியின் அருளைத்தான் 'அதிர்ஷ்டம்' என்பது.

# பழமொழிக் குறிப்புகள்

(ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.)

1. "சுற்றின வரையில் போதும் சுருட்டடி மூட்டையை":—இது சுயகாரியப் புலிகளாயிருந்து சமயம் பார்த்துத் தங்களின் காரியங்களை முற்றிலும் முடித்துக் கொண்டு கம்பி நீட்டுகிறவர்களுக்குக் குறிப்பிடுகிற பழமொழி.

2. "எல்லாம் தெரிந்த எனக்கு இவரார் சோல்லக் கணக்கு":—இது ஒருவனை அண்டி ஸகலமும் கற்றுக் கொண்டு, பிறகு அவன் உதவி தங்கட்குத் தேவையில்லாததால், அவனை எதிர்த்து, அவனைப்போல ஒரு கடை தனிமையில் தாங்களும் வைத்து வர்த்தகம் செய்ய ஆரம்பிக்கிற போது அவனைப் பழித்துச் சொல்லுகிற அகங்கார வார்த்தை.

3. "துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி, என் கையிலிருக்கிறது சூரிக்கத்தி":—தன் வியாபாரத்தில் ஒருவனை நம்பி வைத்துவிட்டுப்போக, அவன் அனைத்தையும் விழுங்கி மோசம் செய்துவிட, அது தெரிந்த முதலாளி ஆத்திரத்துடன் பேசுகையில் அவனை மோசம் செய்தவன் —"நீ பிதற்றுவதெல்லாம் பிதற்று; சூக்ஷமம் என்னிடத்தில் தான் இருக்கிறது; உனக்குத் தகுதியான நஷ்டத்திற்கு வழி எற்படுத்துவேன்"—என்று தன்னுள் தானே பேசியபடி சொல்லுகிற பழமொழி.

4. "செவிடன் காதில் சங்குநாதம் செய்ததுபோல":—தான் எவ்வளவு நல்ல விதமாகக் கூறியும் பயனற்றுப் போகிற சங்கதிகளுக்குச் சொல்லும் பழமொழி.

5. "அகதிக்கு ஆண்டவன் துணை":—பெரிய கைகளெல்லாம் எதிரியின் பக்ஷம் சேர்ந்து கொண்டதைப் பார்த்து, இனி என்ன செய்வது என்று கலங்கிச் சொல்லும் பழமொழி.

6. "எட்டி எட்டிப் பார்த்தும் எட்டாமையினுல் கோட்டாவி விட்டதுபோல":—தன்னை வய்த்துவிட நினைத்த பிறருடைய மாயா ஜாலத்திற்கு மயங்கி விடாமல் அவர்களது நயவஞ்சகம் தெரிந்து விழித்துக் கொண்டவன், அவர்களின் மோசம் பலிக்காமற் போனதைப்பற்றி, அவர்களைப் பார்த்துச் சொல்லிக் காட்டுகிற பழமொழி.

7. "வண்ணானை வழிப்பறித்துப் பிடுங்கி வள்ளுவனுக்குத் தருமம் செய்தது போல":—தன் குமாரத்தி இறந்துவிட, அவள் பேருக்குத் தான் எழுதிவைத்த வீடுவாசல், ரொக்கம், நகைகளை அவள் புருஷன் கைவசப்படுத்திக் கொண்டு, குமாரத்தியின் குழந்தைகளுக்குத் தராமல், புதிதாக வந்த இரண்டாவது பெண்டாட்டிக்கு அவன் உரிமையாக்கும்போது—அப்படிச் சொத்து எழுதிவைத்தவன் பார்த்து வயிறு எரிந்து சொல்லும் பழமொழி.

8. "ஆடு நனைகிறதென்று கோனாய் குந்திக்கொண்டு அழுததாம்":—தன்னை முற்றிலும் மோசம் செய்துவிட்டு, இன்னமும் தன்னை அடியோடு கெடுக்கச் சூழ்ச்சி நாடி, வெளிக்கு வெகு பச்சாத்தாபத்துடன் தன்னிடம் பேச வருகிற ஒருவனுடைய அபிநயத்தைக் குறிப்பிட்டு—அவனால் மோசம் போனவன் சொல்லும் பழமொழி.

9. "ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டுகிறது":—தன் மகன் மரித்துபோக, அவனது மனைவி ஸகலத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டு தன்னையும் வெளிக்கு ஓட்டிவிடப் பார்க்கிறபோது ஒரு தாய் சொல்லும் பழமொழி இது. சாகிற காலத்தில் நாலாவது தாரமாய்த் தன் அண்ணனுக்கு மனைவியாக வந்த ஒருத்தி அவன் இறந்ததும் சகலத்தையும் அவள் வாரிக்கொண்டு, தனக்குச் சேரவேண்டிய வீடுவாசல்களை யெல்லாம் அவளே சொந்தமாக்கிக் கொள்ளும்போது ஒரு தம்பி வயிறு எரிந்து சொல்லும் பழமொழியு மாகும்.

10. "அதரத்தை அடக்கு, சேவியைப் போத்து, விழியை மூடு":—அநியாயமாகத் தன்னைப் பிறர் எதிர்க்கிறபோது புண்பட்டவனொருவன் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொள்வதற்காகத் தன்னைப் பார்த்துச் சொல்லிக்கொள்ளும் பழமொழி.

11. "அதிக்கிரமமான ஊரிலே கோதிக்கிற மீன் சிரிக்கிறதாம்":—தன்னாலேயே கைதூக்கி விடப்பட்டுத் தலைநிமிர்ந்தவர்கள் பிறகொரு காலத்தில் தனக்கே துரோகம் செய்து, தனக்கு உபதேசமும் பண்ண வரும்போது அவர்களைக் குறிப்பிட்டு ஒருவன் உரைக்கும் பழமொழி.

12. "தங்கம் தரையிலே, தவிட்டுப்பானை உரியிலே":— எவ்வளவோ செல்வமாக வளர்ந்த மூத்தாளுடைய குழந்தைகளை அவளுக்குப் பின் வந்த இளையவள் தாறுமாறாக நடத்தி, தன் குழந்தைகட்கு மட்டும் மிட்டாயும் லட்டுமாகக் கொடுத்துப் பாரபக்ஷம் செய்யும்போது, மூத்தாளுடைய குழந்தைகட்கு வேண்டியவர்கள் பார்த்துச் சொல்லும் பழமொழியாகும்.

---

## கமலம்.

அழகிய கமலப் பூவே!
அன்புடன் கூறாய் உன்றன்
பளகறு நலங்கள் எங்கே
பெற்றனை? பகராய் என்றேன்.
"மழைவளப் பொதிகை சேரும்
வண்டமிழ் நாட்டு நல்லார்
எழிலுடை முகத்தி னின்றின்
னலங்களைப் பெற்றேன் அன்றே."

## முத்து.

கடலிடைப் பிறந்த முத்தே!
கருதி நான் ஒன்று கேட்பேன்
திடனுடன் எழிலும் சீரும்
எங்கு நீ பெற்றாய்? என்றேன்.
"வடிவுடைத் தமிழ மாதர்
முறுவலைக் கருதிப் பன்னாள்
படியினிற் றவங்கள் செய்திப்
பான்மையைப் பெற்றேன் அன்றே."

## பொன்.

பொன்னென உலக மெல்லாம்
போற்றிடும் பொருளே! உன்றன்
மின்னிகர் வண்ணம் எங்கே
பெற்றனை! விளம்பாய் என்றேன்.
"அன்னையர் தமிழ்ப் பா வாற்றம்
மதலையர் அழுகை போக்கும்
கன்னியந் தமிழ் நன்னாட்டுக்
கன்னிய ரிடத்தி னன்றே."

கெ.

உ

# லக்ஷ்மி தேவி

"குழலு நகையெறி நிலவு மழகிய
குமரி ; வடிவது பொன்னிறம் பூத்தவள் ;
குதலை மொழிபழ கிரதி கணவனை
அருளி முலையமு துண்ணவென் றூட்டினள் ;
மழையை யனையதன் முதல்வ னுரமிசை
மருவி யநுதின மின்னெனுங் காட்சியின்
வளரு மயிலினை வனஜ மலர்புகு
கிளியை யெமதிரு கண்ணிடம் போற்றுவாம்."

மங்களகரமாக ஒரு தொழிலைத் துவக்கிச் செவ்வனே நடத்தித் தமக்கும் பிறருக்கும் நலனும் பயனும் பெருக ஒருவர் விரும்பின் லக்ஷ்மி தேவியின் கருணைப் பெருக்கம் இன்றி யமையாதது. இச்சிறப்பை விளக்குங் கருத்துக் கொண்டே லக்ஷ்மீகரத்தைக் குறிக்கும் " திரு " என்னுந் தமிழ் மொழியும், " ஸ்ரீ " என்னும் வடமொழியும் விசேடச் சிறப்பு வாய்ந்த பல்வகைய பொருட் பெயர்களின் முன்பும் அடைமொழியாக அமைக்கப் பட்டு நந்தம் தமிழ்ப் பாஷையில் வழக்கிற் போந்துள்ளன. உதாரணமாக, திருக்குறள், திருக்கோவையார் என அரிய நூற் பெயர்களின் முன்னரும், திருவள்ளுவர், திருநாவுக்கரசு எனச் சிறந்த பெரியோர்களின் பெயர்களின் முன்பும், திருத்தொண்டு, திருப்பணி எனக் கடவுட் கியற்றும் அடிமைத் தொழிலைக் குறிக்குஞ் சொற்களின் முன்புங் காண்க. இவ்வாறே " ஸ்ரீ " என்னும் பதமும் தமிழில் " சீ " என நின்று சீரங்கம், சீராமன் என்புழிப் போல அடைமொழியாக வரும். உலக வழக்கிற் சகல செல்வங்களுள்ளும், கல்விச் செல்வத்துக்குச் சரஸ்வதியை அதிதேவதை யாகவும் பொருட் செல்வத்துக்கு லக்ஷ்மி தேவியை மூலகாரண முதல்வியாகவும் பாராட்டு கின்றோம். பொருட் செல்வத்தின் பெருமைக்கு

" இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் ; செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு "



5

என வருந் திருவள்ளுவர் வாக்கே சான்றும். இத்தகைய பெருமை வாய்ந்த லக்ஷ்மியின் கடாக்ஷத்தை யாவரும் பெற விரும்புவது இறும்பூ தன்று.

அவ்வாறே இத்தேவியின் பெயர் வாய்ந்த இப்பத்திரிகையையும் யாவரும் பெற்றுத் திருவொடு பொலிவதே எண்ணமாகக் கொண்ட பத்திராதிபர் லக்ஷ்மி தேவியைக் குறித்து ஏதேனும் இப் பத்திரிகைக்கு எழுதவேண்டுமெனத் தம திச்சையை எம்மிடந் தெரிவித்தனர். லக்ஷ்மி தேவி என நினைத்ததும் அத்தேவியின் பெயர் வாய்ந்த "கமலாலயப் பதி" என்னும் மஹா விசேஷ ஸ்தலமான திருவாரூர் நினைவுக்கு வந்தது. அத்தலத்துக்கு அப் பெயர் வந்த விவரம் திருவாரூர்ப் புராணத்திற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. திருப்பாற்கடல் கடைந்த காலத்து அமுதொடும் பிறந்தனள் திரு (லக்ஷ்மி). அத்தேவியைத் தனது மகள் போலப் பாவித்துச் சமுத்திர ராஜன் வளர்த்தனன். அவ்வாறு வளர்ந்து வருங்காலத்தில் மது கயிடவ ரெனப்படும் அரக்கர்கள் தேவர்களுக்கு இடுக்கண் செய்யத் தேவர்களின் வேண்டுகோளுக் கிரங்கித் திருமால் அவ் வரக்கர்களுடன் ஆயிர மாண்டு போ ரியற்றி அவர்களை வாட்டி வெற்றி கொண்டனர். இச்செய்தியைக் கேட்ட திருமங்கை மதுகயிடவரை வென்ற "அந்தத் தலைவற்கே தலைவியாவன்" என விரதம் பூண்டு பெரு மகிழ்ச்சியுடன் தன் தந்தை தாயுடன் கூறித் தன் எண்ணம் நிறைவேற 'ஆரூர்' என்னும் தலத்தில் தவ மியற்றினள். செய்த தவப்பயனால் தாமரை வல்லியாம் "திரு" "மாயோனை நற்பெருங்கணவனாப்" பெற்றனள். அன்று தொட்டு "அந்தண் ஆரூரென்னும் புரமதற்கு வண் பூங் கமலாலயம்" எனும் பெயர் பொலிந்தது.

இனி, லக்ஷ்மி தேவி வாசஞ் செய்யு மிடங்கள் இவை எனசசொல்லப்பட்டுள்ள குமரேச சதகச் செய்யுளும் ஈண்டுகவனிக்கற் பாலது.

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங் கமலா சனந்தன்னிலும்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங் காலியின் கூட்டத்திலும்

நடவாடு பயிரிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந் தன்னிலும்
நல்ல சுப லக்ஷண மிகுந்த மனை தன்னிலும்
ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலும்
அருந்துளசி வில்வத்திலும்
அலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு மதிக குண மான ரூப
மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது மாரு திருப்ப ளன்றோ,
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே.

மேற்காட்டிய செய்யுளிற் கூறிய படி நல்ல சுப லக்ஷண மிகுந்த மனை ஒவ் வொன்றிலும் ஸ்ரீ லக்ஷ்மியின் திருநாமம் பூண்டுள்ள இப்பத்திரிகை என்றும் நின்று நிலவு மாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருளும் லக்ஷ்மி தேவியின் கருணைப் பெருக்கமும் மிகப் பொலிந்து விளங்குவதாக!

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

---

# திருவளர் தாமரை.

திருமகளுக்கு உறைவிடமான தமிழ் நாட்டில் லக்ஷ்மி என்ற அழகிய பெயருடன் ஒரு பத்திரிகை தோன்றியது திருமகளின் திருவரு ளென்றே சொல்லவேண்டும்.

***

சரஸ்வதி பூஜையைக் கொண்டாடுவதுபோல லக்ஷ்மி பூஜையைத் தமிழர்கள் கொண்டாட வில்லை. இனியேனும் தமிழகத்தார் சரஸ்வதி பூஜையைப் போலவே லக்ஷ்மி பூஜை யையும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

***

ஒரு காலத்தில் நமது நாடு அஷ்ட லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்று விளங்கியது. இன்றோ வறுமையும் சிறுமையும் நாட்டில் பெருகி யிருக்கின்றன. வறுமையும் சிறுமையும் ஒழிந்து பழைய பெருமை அடையுமாறு நாம் திருமகளைப் போற்ற வேண்டும்.

இந்தப் பத்திரிகை—லக்ஷ்மி—லக்ஷ்மி விரத தினத் தன்று தோன்றுகிறுள் இது நன்று.

## லக்ஷ்மி

தன லக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, தைர்ய லக்ஷ்மி, ராஜ லக்ஷ்மி, ஜய லக்ஷ்மி முதலிய அஷ்ட லக்ஷ்மிகளாக லக்ஷ்மி யை நம் முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள்.

***

மதுரை மீனாக்ஷி யம்மன் கோயில் முன் மண்டபத் திற்கு அஷ்ட லக்ஷ்மி மண்டபம் என்று பெயர். அங்குள்ள தூண்களில் அஷ்ட லக்ஷ்மிகளின் அழகிய உருவங்களைக் காணலாம்.

***

திரு என்றால் லக்ஷ்மி யென்று பொருள். திருமகளும் லக்ஷ்மியே. வடமொழியில், ஸ்ரீ யென்று கூறுகிறார்கள். லக்ஷ்மீ கரம் பொருந்தி யிருப்பதைக் குறிப்பதற்காகவே ஊரின் பெயர் முன்னும், பெரியோரின் பெயர் முன்னும் திரு என்ற திருமொழி சேர்க்கப்படுகிறது. திருநெல்வேலி, திருவாரூர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய பெயர்களை நோக்குக. திருவிழா, திருவிளக்கு, திருப்பணி, திருப்பதி, திருக்குறள் முதலியவற்றி லெல்லாம் திருவே திகழ்கின்றது. தாமரைக்குத் திருவளர் தாமரை யென்று பெயர்.

***

லக்ஷ்மியும், சரஸ்வதியும் தாமரைப் பூவில் உறைவ தாகக் கற்பனை செய்த நம் முன்னோர்களின் அறிவைப் போற்ற வேண்டும்.

***

நமது நாட்டுப் பூக்களில் சிறந்தது தாமரைப் பூவே. தமிழ் நூல்களெல்லாம் தாமரை மயமா யிருக்கின்றன. கோயில்களில் எங்கு பார்த்தாலும் தூண்களிலும், மண்டபங் களிலும், தளத்திலும் தாமரைப் பூவைக் காணலாம். யோக சாஸ்திரத்திலும் தாமரைப் பூ வருகிறது. மனிதன் உடம் பில் உள்ள ஆறு தாரங்களும தாமரைப் பூவின் உருவத்தி லேயே இருப்பதாகக் கூறுகிறார்கள். கோலம் போடும் பெண்களும், ஒன்றும் போடாவிட்டாலும் (லக்ஷ்மி வாச மான) தாமரைப் பூவைப் போட்டு விடுகிறார்கள்.

# திருவளர் தாமரை

லக்ஷ்மிக்குப் பூமகள், பதுமை யென்ற பெயர்களும் பிரமனுக்குக் கமல நான்முகன், பூவில் வாழ் அயன் என்பன போன்ற பிரயோகங்களும், அவர்கள் தாமரைப்பூவில் வசிக்கும் காரணத்தாலேயே ஏற்பட்டன. உலகத்திற் கெல்லாம் உயி ரளிக்கும் சூரியனுக்குச் செந்தாமரைப்பூவே உவந்த பூவாகும்.

***

"தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரை யென் உள்ளத் தடத்து"

என்ற பாட்டில் தாமரை எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது!

***

செங்கமல நாட்டம்; செழுந்தாமரை வதனம்
பங்கயம் செவ்வாய்; பதுமம்போற்—செங்கரங்கள்;
அம்போருகம் தாள்; அரவிந்தம் மாரனுர்
தம்போ ருகந்தாள் தனம்.

***

திருமுகம் கமலம்; இணைவிழி கமலம்;
செய்யவாய் கமலம்; நித்திலந் தாழ்
வருமுலை கமலம்; துணைக்கரம் கமலம்;
வலம்புரி உந்திபொற் கமலம்;
பெருகிய அல்குல் மணித்தடம் கமலம்;
பிடிநடைத் தாள்களும் கமலம்;
உரு அவட் கவ்வா றுதலி னன்றே
உயர்ந்தது பூவினுட் கமலம்.

என்பன போன்ற பாடல்களில் தாமரையின் அழகு எவ்வளவு அழகாய்த் திகழ்கிறது!

***

திருவடித் தாமரை, பாத பொற்கமலம், பாத பங்கயம், பாதாம்புஜம் என்ற சொற்றொடர்கள் தாமரையையே குறிக்கின்றன. பெண்களின் முகத்தையும், கண்ணையும், கையையும் காலையும் வர்ணிப்போர் அவற்றைத் தாமரைக்கு நிகரென்றே கூறுகின்றனர். கண்ணனைக் கமலக்கண்ணன் என்றும், தாமரைக் கண்ணனென்றும் கூறுகின்றோம். இத்தகைய தாமரைக்கு விசேஷப் பெருமை யிருக்கவேண்டும். ஆனல் இதனைத் தற்காலத்தி லுள்ள நம்மவர்கள் மறந்து விட்டார்கள்.

தாமரையின் மகிமையை அறிந்தவர்கள் நாட்டிலே ஆயிரத்தில் ஒருவர்கூடக் கிடையாது. கோயிலை அடுத்துள்ள குளத்திற்குப் பொற்றாமரை என்று பெயர். ஆனால் அதில் ஒரு தாமரைகூடக் கிடையாது.

***

திருமகளுக்கும் அவள் மருமகளுக்கும் உறைவிடமாகக் கருதப்படும் தாமரைப்பூவில் ஏதோ விசேஷ மகிமையிருக்க வேண்டும். அதனால் தான் நமது பழைய நூல்களிலெல்லாம் தாமரையை ஏராளமாகக் காண்கிறோம். ஆனால் இக்காலத்திலோ நாட்டிலே தாமரையை அதிகமாகக் காணோம். ஊருக் கொரு தாமரைக் குளமாவது ஏற்பட்டால் அந்த ஊருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும்.

***

தாமரை யிருந்தால் அந்தக் குளத்துக்குப் பெருமையும் அழகும் உண்டு. ஜலத்திற்கும் சுத்தம் உண்டு. தாமரைப் பூவைக் கோயிலுக்குக் கொடுக்கலாம். தாமரை இலை சாப்பிடுவதற்கு நல்லது. தாமரையால் வேறு பல நன்மைகளும் உண்டு.

***

விவசாய நிபுணர் ஒருவர் எழுதியுள்ள புஸ்தகம் ஒன்றில் ஒரு விவசாயிக்குப் பத்து ஏக்கர் நிலம் இருந்தால் அதில் பத்து செண்டு அளவுள்ள ஒரு குட்டை யிருக்க வேண்டுமென்றும், அதில் தாமரை வளர்க்க வேண்டுமென்றும் கூறுகிறார். தாமரை இலைகள் மூலமாய்த் தண்ணீர் நீராவியாக மாறி வரும்பொழுது சீதளம் உண்டாகிறது. இது நிலத்தில் உள்ள பயிர்களுக்கு நல்லதென்று அவர் கூறுகிறார்.

***

பூலோகத்தில் தாமரைப் பூவே அழகிலும் பெருமையிலும் தலை யான தென்று நம் முன்னோர்கள் கருதியிருக்கிறார்கள்.

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை"
"பூவெனப் படுவது பொறிவாழ் பூவே"

என்ற பாடல்கள் அதனால் தான் எழுந்தன போலும்.

ஆனல் வெண்டாமரையையும், செந்தாமரையையும், நீலத்தாமரையையும் கண்டு மகிழும் கண்களை நாம் இழந்து விட்டோம். நமது கண்கள் இப்பொழுது அழகற்ற பொருள்களில் அழகைக் காண்கின்றன. நமக்குப் பழைய கண்கள் எற்பட்டால் நமது தாமரை, நமது நாடு, நமது கோயில், நமது குளம், நமது விளக்கு, நமது சிற்பம், நமது நாகரிகம், நமது கலைகள் இவற்றிலுள்ள பேரழகை யும் பெருமையையும் கண்டு மகிழும் பாக்கியம் எற்படும்.

தாமரை வாழ்க! தாமரைப் பூவில் வாழும் லக்ஷ்மி வாழ்க! லக்ஷ்மிப் பத்திரிகை வாழ்க!

நெ.

---

# இன்பம்.

எங்கு நோக்கினும் இன்பம் நல்லின்பம்
என்னைச் சுற்றிலும் இன்பம் நல்லின்பம்
தங்குகின்ற இவ் வையகம் இன்பம்
தருக்களும் மலர்ச் சுனைகளும் இன்பம்
பொங்குகின்ற கடல், மலை, யாறு,
பொன்னிறத்த பரிதியும் இன்பம்
திங்களும் கரு வானமும் இன்பம்—(இந்த)
ஜீவ வாழ்க்கையும் இன்பம் நல்லின்பம் (1)

மழலைபேசும் குழந்தைநல் இன்பம்
மனிதர் இன்பம், மாதர்கள் இன்பம்
அழகு வாய்ந்திடு புள்ளினம் இன்பம்
ஆவினங்களும் இன்பம் நல்லின்பம்
ஒழுகுகின்ற பேர் அருவி நல்லின்பம்
உதயத் தாமரைப் பூவும் நல்லின்பம்
தொழுது போற்றிடும் கோயில் நல்லின்பம்
ஜோதி வானவன் இன்பம் நல் இன்பம் (2)

நெ.

# குழந்தைப் பாட்டு

(தொல்லை யிழைத்திடும் பையல்.)

தொல்லை யிழைத்திடும் *பையல்—மிகத்
துஷ்டத் தனஞ் செய்யும் பையல்
சொல்லினைக் கேளாத பையல்—மிகச்
சுட்டித்தனஞ் செய்யும் பையல்
பல்லினைக் காட்டிடும் பையல்—மிகப்
பாசாங்கு செய்திடும் பையல்
அல்லும் பகலுமிங் கென்றும்—ஓயா
ஆட்டங்கள் காட்டிடும் பையல். (1)

கல்லையும் மண்ணையும் நாடி—என்றும்
கருத்துடன் தின்றிடும் பையல்
நல்லதுந் தீயதும் ஒன்றாய்—என்றும்
நாட்டத்தில் கொண்டிடும் பையல்
வெல்லற் கரியதோர் பையல்—பொய்
வேஷங்கள் போட்டிடும் பையல்
செல்வச் சிறுமணிப் பையல்—பெருந்
தெய்வங்கள் வாழ்த்திடும் பையல். (2)

விளக்கைப் பிடித்திடும் பையல்—அது
வேண்டுமென் றாடிடும் பையல்.
களக்கமில் உள்ளத்துப் பையல்—எங்கள்
கண்ணினுள் வாழ்ந்திடும் பையல்.
சழக்குகள் செய்திடும் பையல்—என்றும்
சண்டைகள் போட்டிடும் பையல்.
அளக்கருந் தொல்லைசெய் பையல்—எங்கள்
ஆர்வ மிகும் †மணிப் பையல். (3)

(*பையல் என்ற சொல்லைப் பயல் என்று உச்சரியாமல் பையல் என்று உச்சரிக்க வேண்டும். †மணி யென்பது ஒரு குழந்தையின் பெயர்.)

ரெ,

# ஆறு

(ஸ்ரீமான் S. தேசிக விநாயகம் பிள்ளை.)

கும்மி.

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி யெங்கும்—நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். (1)

கட்டும் அணையேறிச் சாடி வந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்.
திட்டுத் திடர்களும் சுற்றி வந்தேன்—மடைச்
சிப்புகள் மோதித் திறந்து வந்தேன். (2)

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளிரப் பயிர் கண்டு வந்தேன்.
ஆயும் மலர்ப்பொழில் செய்து வந்தேன்—அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.' (3)

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்.
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். (4)

ஆயிரம் காலால் நடந்து வந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன். (5)

பஞ்சை யரைத்து நூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்து வந்தேன்.
நெஞ்சம் உலர்ந்த நெடு நகரிற்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்து வந்தேன். (6)

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்.
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன். (7)

அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்.
நில்லும், எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா! (8)



6

# விகடத் துணுக்குகள்

ஒரு பையன் விஷமம் செய்து கொண்டிருந்தான். அவன் தகப்பனுர் ஓடி வந்து "துஷ்டப் பயலே!" என்று அடித்து, "என் இப்போது உன்னை அடித்தேன் தெரிந்ததா?" என்று கேட்டார். பையன் அழுதுகொண்டு "தெரிந்தது அப்பா! தாங்கள் என்னை விடப் பெரியவர் என்று அடித்தீர்கள்" என்ருன்.

***

உபாத்தியாயர்.—கள்ளை அருந்தாத ஓர் ஜீவனைப்பற்றிச் சொல்.

பையன்.—ஸ்டீம் இஞ்சின் ஐயா!

***

உபாத்தியாயர்.—பையா! பல்லில்லாத ஓர் பிராணியின் பெயரைச் சொல்.

பையன்.—ஐயா! என் பாட்டி.

***

ஜோசியர்.—பையா! உனக்குப் பரீக்ஷை தேறுமா, தேருதா? ஜோசியம் பார்த்துச் சொல்லுகிறேன், நாலணு தருகிருயா?

பையன் :—வரும் காலச் சங்கதிகள் உமக்குத் தெரியுமானுல், என்னிடம் நீர் கேட்ட சில்லரை இல்லை என்பதை ஏன் தெரிந்து கொள்ளவில்லை?

***

பையன்.—ஐயா, போஸ்ட் மாஸ்டர்! எனக் கொரு கடிதம் வந்திருக்கும் அதைக் கொடும்.

போஸ்ட் மாஸ்டர்:—உன் பெய ரென்ன?

பையன் : கடிதத்தின் மேல் விலாசம் பாரும். இது உமக்குப் படிக்கத் தெரியாதா?

***

பையன் :—பாலைவனம் என்ருல் என்ன அம்மா?

தாய்.—ஒன்றும் முளையாத இடம்.

மறுநாள் அந்தப் பையனை அவன் உபாத்தியாயர், "பாலைவனம் என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு அப்பையன் "எனது தந்தையின் வழுக்கைத் தலை" என்று மறுமொழி கூறினன்.

***

ஒரு பையனை இரண்டு துஷ்டர்கள் கட்டிவந்து ஆளுக்கொரு புறமாக நின்று, அவன் கையைப் பிடித்துக்கொண்டு பயமுறுத்தி "நீ மட்டியா? மடையனா?" என்று கேட்டார்கள்.

அதற் கவன் "ஐயா! நான் மட்டிக்கும், மடையனுக்கும் நடுவில் இருக்கிறேன்" என்றான்.

மற்றிருவரும் முகம் கவிழ்ந்து வெட்கிச் சென்றனர்.

***

தாய்.—என்னப்பா! குமரவேள்! உன் தங்கை மோகனத்தின் நினைவே யில்லாமல் உனக் களித்த பக்ஷணத்தை யெல்லாம் தின்று விட்டாய்.

பிள்ளை.—இல்லை யம்மா! நான் தின்னும் போதெல்லாம் தங்கையின் ஞாபகம் தான் அதிகம். எங்கே நான் உண்ணும் மத்தியில் வந்துவிடப் போகிறாளோ என்று எண்ணிக் கொண்டு தான் சாப்பிட்டேன்.

***

பையன்.—அப்பா! எனக்கு அந்த ஊதலை வாங்கிக் கொடு.

தகப்பன்.—போ! போ! முடியாது. அதை உனக்கு வாங்கிக் கொடுத்தால் சதா ஊதி ஊதி எனக்குத் தலை நோய் உண்டாக்குவாய்.

பையன்.—இல்லை, அப்பா! இல்லை. நீ தூங்கிக் கொண்டிருக்கும்போது உட்கார்ந்து நான் அதை ஊதுவேன்.

***

## உலகத்தில் நிறையில் பெரிய மனிதர்.

யுகஸ்லேவியாவிலுள்ள ஸெபிட்சார் என்பவர். அவர் நிறையில் ௫௪-ஸ்டோன்களும் 5 பவுண்டும இருக்கின்றார். அவருடைய மார்பின் சுற்றளவு சுமார் இரண்டு கெஜம் இருக்கின்றதாம்.

# பெண்கள் பகுதி

ஜப்பானியத் தாய்மார்கள் மணப் பெண்களுக்கு விவாகத் தினத்தன்று பின்வரும் புத்திமதிகளைப் புகட்டு வார்கள்.

கலியாண மான பின் நீ எனது மக ளல்ல. உனது கணவரின் பெற்றோர்களுக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கவேண் டும். மணவினை முடிந்த பின்னர் உனது கணவனே உனது எஜமான். உனது மாமியாருடன் எப்பொழுதும் அன்பாக நடந்து கொள்ளவேண்டும். எவ்வித சச்சரவுமின்றி அவர்க ளிடத்தில் மனமொத்துப் போகவேண்டும். பொறாமை என்பதே கூடாது. உனது புருஷனுக்கு உன் மீதுள்ள அன்பை இப்பொறாமை அழித்துவிடும். உனது புருஷன் எதாவது தவறான காரியத்தைச் செய்து விட்டாலும் நீ சிறிதும் கோபப்படாது பொறுமையுட னிருக்க வேண்டும். குறி சொல்பவரிடம் குறி கேட்கலாகாது. அதிகம் பேசக் கூடாது. அண்டை வீட்டாரைப் பற்றியும் பேசலாகாது. ஒருபொழுதும் பொய் பேசலாகாது. உனது புருஷன் வீட்டார் முன்னிலையில் உனது பெற்றோரின் அந்தஸ் தைப் பற்றியாவது செல்வத்தைப் பற்றியாவது புகழ்ந்து பேசலாகாது. குடும்ப விஷயங்களில் மிகச் சிக்கனமா யிருப்பதோடு குடும்பக் காரியங்களைச் சரிவர நிர்வகிக்க வேண்டும். நீ இளவயதினளாய் இருந்த போதிலும், வயதில் முதிர்ந்தவர்க ளுடனேயே அதிகமாகப் பழகவேண் டும். எப்பொழுதும் சுத்தமான, சாதாரணமான உடை களைத் தரிக்கவேண்டும்.

௨

# பதியிலக்கணம்

(ஸ்ரீலஸ்ரீ நமசிவாய தம்பிரான்.)

கயிலாய பரம்பரையிற் சிவஞான
　　போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
　　மெய்ஞ்ஞான பாநுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடு துறைவாழ்
　　குரு நமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
　　நீடூழி தழைக மாதோ.

ஆண், பெண், அலி தேக முதலான காரிய ரூபப்
பிரபஞ்ச மெல்லாம் வேதாகமங்களில் இன்ன தின்னபடி
தோன்றி, இன்னபடி புசித்து நின்று, இன்னபடி அழியு
மென்று சொன்னபடியே, தோன்றி நின்றழியக் காண்கை
யால், இப் பிரபஞ்சத்தை உண்டாக்குவான் ஒரு கர்த்தா
வேண்டும். அக்கர்த்தா தான் இப் பிரபஞ்சத்தைச்
சம்ஹரித்து, மீளவு முண்டாக்குவன். அவன் இலக்கணம்
எதெனின்? அநாதி நின்மல ஞான ஸ்வரூபன். ஆதாரம்
எதெனில்? சர்வ வ்யாபியாய் நின்றே ஜடசித்துக்களைப்
பிரேரிப்பன். அவன் நாம மேதெனின்? அஞ்ஞானத்தை
அரிக்கிறவ னுகலின் அர னென்னும் யோக நாமத்தை
யுடையவன்.

நால்வகை யோனியுள் ஒரு யோனி வாய்ப்பட்டுப் பிறப்
பன யாவை? அவையெல்லாஞ் சீவவர்க்கம்; அவ்வாறு பிறத்த
லில்லது யாது? அது பதிப்பொருள். இது ஒன்றே எனைச்
செயல்களான் வேற்றுமை யறிய வாராத அவ் விரண்டிற்குந்
தம்முள் வேற்றுமை யறிய நிற்பதாகலின் எனைத் தேவர்
முதலாயினோர் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப் படுதலா
னும், சிவ பிரானுக்கு அஃ துண்டெடன்பது, யாண்டுங்
கேட்கப் படாமையானும், சிவபிரான் ஒருவனே உலகிற்கு
முதற் கடவுள் என்க.

நித்தியமாய் வியாபகமாய் அப்பிரமேயமாய்த் தனக்
கொருவாற்றானும் உவமையில்லாததாய் முதல், ஈறு, கடடு,
வீடு இவைகள் ஒன்றுமில்லாததாய்ப், பெருமையதாய், நுண்
ணியதாய்ப் பாசஞான பசுஞானங்களால் அறியப்படுதலின்
றிச் சிவஞானத்தால் அறியப்படுவதாய்த் தன்னியல்பி னிற்
கும் சிவப்பொருளாகிய அம் முதற் கடவுள் இருண்ட



7

ஆணவ மலத்தின் மூழ்கி உய்யும் வண்ண மறியாத பசுக்களைப்பெருங்கருணைத் திறத்தினாலே அம்மலத்தினின்றும் விடுவிக்கவேண்டி மாற்றான் பஞ்சகிருத்தியஞ் செய்ய வெண்ணிச் சிவசத்தியோடு பிரிவின்றி நின்று, சிவம், சத்தி, சதாசிவம், மகேசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களை நிலைக்களமாகக் கொண்டு, லயபோக அதிகாரமென்னும் மூன்றவத்தையினும் முறையே அருவம், அருவுருவம், உருவமென்னும் மூன்று திருமேனி கொண்டு, சத்தன், உத்தியுத்தன், பிரவிருத்தன் எனவும், சிவன், சதாசிவன், மகேசன் எனவும் பெயர் பெற்றுச் சுத்தமாயையின் கிருத்தியம் ஐந்தும் தாமே செய்வர். அசுத்த மாயையின் கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுவரரை அதிட்டித்து நின்று செய்வர். பிரகிருதி மாயையின் கிருத்தியம் ஐந்தும் ஸ்ரீகண்டருத்திரரை அதிட்டித்து நின்று செய்வர். இந்தப் பிரகாரம் சிவம், சத்தி, விந்து, நாதமாகிய அருவம் நான்கும் சதாசிவமாகிய அருவுருவம் ஒன்றும், பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன் என உருவம் நான்கும் ஆகிய மூத்திறத்து ஒன்பது வருக்கத்திலும் நின்று பஞ்சகிருத்தியஞ் செய்வராயினும், ஞாயிறு தன் சந்நிதிக்கண் சூரிய காந்தக் கல்லின் கண்ணே நெருப்பைக் காலச்செய்தும், தாமரையை அலரச் செய்தும், பூமியின் கண் நீரைச் சுவறச் செய்தும் விகாரமெய்தாமை போலவும், பாம்பினிடத்து விடம்போலவும், அக்கினியினிடத்துச் சூடுபோலவும், இந்திர சாலவித்தையினிடத்துப் பண்ணுகின்றவர்கள் போலவும் விகாரமின்றி நிற்பர். பஞ்சகிருத்தியம் செய்ய இச்சையுடையவர் லயசிவன், எழுச்சியுடையவர் போக சிவன், கிருத்தியத்தைச் செய்தலுடையவர் அதிகார சிவன். இன்னும் லயபோக அதிகாரம் தூல சூக்கும வேறு பாட்டால் பல திறப்படும். அவை யாவன: சூக்குமமாகிய ஞானக்கிரியை சேர்ந்து நிருவிகற்பமாய் நிற்கும் அவதரம் சூக்கும லயம். அது சிவம், இச்சா ஞானக்கிரியை ஸ்தூலமாக விளங்கி ஸ்தூலமான நிருவிகற்பமாயுள்ள அவதரம் ஸ்தூல லயம். அது சக்தி. பாலுக்குந் தயிருக்கு மத்தியிலுள்ள அவதாம போலும் போகாவஸ்தை அது சதாசிவம். அதிகாரம் இரண்டு வகைப்படும். அவையாவன: சூக்கும அதிகாரம் ஈசுரத்துவம், ஸ்தூல அதிகாரம் சுத்த வித்தை.

(இன்னும் வரும்.)

# சமாச்சாரக் குறிப்புகள்.

வெள்ளத்தில் தப்பிய குழந்தை:—துங்கா நதியின் வெள்ளப்பெருக்கு, தீர்த்தஹள்ளி கிராமத்தில் மோதி அடித்துக் கொண்டு போனதில் தொட்டிலோடு ஒரு குழந்தை வெள்ளத்தில் மிதந்து போயிற்று. ஷிமோகா (Shimoga) என்ற இடத்தில் வெள்ள வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஜனங்கள் அஷ்டி தொட்டிலோடு குழந்தையைக் கரையேற்றிக் காப்பாற்றினர்கள். கடவுளின் கருணை போற்றக் கூடியதே.

***

பர்மாவில் பாசீன் (Bassein) ஜில்லாவில் வெள்ளச் சேதத்தால் 2,23,000 எக்கர் விஸ்தீரணமுள்ள நெல் வயல்கள் நாசமாயின.

***

வட இந்தியாவில் கங்காநதி தீரத்திலுள்ள கான்பூர், அலகாபாத், காசி, பாடலிபுரம் முதலிய பட்டணங்களின் சமீபத்திலுள்ள பல கிராமங்கள் வெள்ளத்தால் நாசப்படுத்தப்பட்டதோடு, பெருவாரி நஷ்டங்களும் ஏற்பட்டன

***

ஆச்சரியமான பனைமரம்:—அனந்தபுரம் ஜில்லாவில் "ராயல் செருவு" கிராமத்தில் இருபதடி உயரத்தில் ஒரு பனை நிற்கின்றதாம். ஒவ்வொரு நாளும் இரவு 12-மணி முதற்கொண்டு பகல் 12-மணிவரை கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாய்ந்து சரியாய் 12-மணிக்குத் தரையோடு தரையாக விழுந்து விடுகிறது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்ந்து இரவு 12-மணிக்குச் சரியாக நிமிர்ந்து விடுகிறதாம்.

***

திருச்சியில் நாளது மாதம் 18, 19உ களில் தமிழ் ஜில்லா பிராமணரல்லாதாரின் மஹாநாடு கூடிற்று. இராமநாதபுரம் சேதுபதி ராஜா அவர்கள் அக்கிராசனாதிபதியாகவும், ஆண்டிபட்டி ஜமீன்தார் திவான்பகதூர் பெத்தாச்சி செட்டியார் அவர்கள் வரவேற்பு கமிட்டியின் தலைவராகவு மிருந்தார்கள்.

# APPROACHING
# HAPPY NEW YEAR 1924.

Every Businessman wants to increase
his business and please Customers,

## HOW TO PLEASE THEM AND THAT TOO PERMANENTLY!

## CALENDARS.

A sure way to success in business. Our **New Stock consists of Calendars** of different sorts, shapes and sizes such as Beauties, Sceneries, Indian Gods and Goddesses, National Leaders, Perpetual and Desk Calendars, Show Cards, Wall Pockets, Visiting Cards and other Advertising Novelties to suit all trades.

*Apply to :—*

## Maneklal Maganlal & Co.

**CALENDAR SPECIALISTS,**

**22, Broadway, MADRAS.**

*Head Office :*—7-9, Cowasjee Patel Street, Fort, BOMBAY.
*Branch :*—85, Fraser Street, RANGOON.

## கிளாவர்க் கரைப்

# பட்டுப் புடவை

---

உடல் சாதா, அழகான சிறிய ஜரிகைக் கரை, தினப்படி துவைக்கக் கூடியது. நாகரீகமாயும் அழகாயு மிருக்கும். கலர் வெள்ளை, கத்திரிப்பூ, வெங்காய வர்ணம், நீலம், ஸ்நப் முதலிய பல கலர்கள்.

| | | |
|---|---|---|
| 12 மு. x 44 | 1-க்கு | ரூ. 35—40 |
| 16 மு. x 44 | 1-க்கு | ரூ. 50—55 |
| 18 மு. x 44 | 1-க்கு | ரூ. 60—65 |

☞ ஷை புடவையில் கரைகளுக்கு இரண்டு மூன்று நாலு கிளாவர் கரை போட்டதும் கிடைக்கும்.

---

## தங்கப் பதக்கப்

# பட்டுப் புடவை

(Gold Medal Sari)

இந்தப் புடவையில் உடல் சாதா, விளிப்புக்கு ஜரிகை டேப்புக் கரையும் முக தலையுள்ள எல்லா விதமான கலர்களிலும் கிடைக்கும்.

16 மு. x 44 1-க்கு ரூ. 35 முதல் 55 வரை.

கேட்லாக் இனம்!

**கே. எஸ். முத்தையா & கம்பெனி,**

சில்க் அவுஸ், **காசி.**

**Yes, Muthiah's Silk Cloths are just lovely;**

*"I have tried others, but always go back to "Muthiah's". It is not only soft and beautiful, but washes, wears so well and is really to be bought at a sensible price."*



**K. S. MUTHIAH & Co.**

SILK HOUSE,

BENARES CITY, MADRAS & TINNEVELLY.

Printed by M. A. Nellavappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.